JL
Q22m211,N26
N37.12.8
159927

145.

25

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்,

மாதம் இருமுறை வெளிவரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரகாசப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1938
MADRAS

ஸம்புடம் 12] [நெம்பர் 8.

திவ்யார்த்த தீபிகை.

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

18—12—1937

விஷயஸூசிகை.

1. திருவாய்மொழி உரை 3 பாரம்.
2. ஆசார்யஹ்ருதயஸாரம் 1 பாரம்.

சென்னை நியூமன் அச்சுக்கூடம்.

விலை அணா 4] 1937 [தபால் சார்ஜ் தனி

இந்த பத்திரிகை கிடைக்குமிடங்கள் :—

நியூமன் பிரஸ், 19, டேவிட்ஸன் தெரு, ஜி. டி. மதராஸ்.

A. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், 45, மொபரிஸ் ரோட், மைலாப்பூர்.

G. ரங்கய்ய நாயுடு, 36, சாமிநாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

Printed & Published by T. Narayanaswami Naidu at Newman Press, 19, Davidson St., Madras.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ப்ரபந்நஜநகூடஸ்தரான

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழி.

OFFICE OF REGISTRAR OF BOOKS JUN 1938 MADRAS

[நான்காம் பத்து.]

பெருமாள்கோயில்

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியரால்

எல்லார்தமக்கும் இன்பம்பயக்குமாறு எளியநடையில் தெளிய எழுதப்பட்ட

திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.

சென்னை நியூமன் அச்சுக்கூடத்தில் ஷை அச்சுக்கூடத் தலைவரால்

பதிப்பிக்கப்பட்டது.

ஈச்வர௵ ஐப்பசியில் திருமூலம்.

1937.

காஞ்சி. ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி இயற்றிய நூல்கள்.

159927

திருப்பல்லாண்டு உரை
பெரியாழ்வார் திருமொழி உரை
திருப்பாவை உரை
நாச்சியார் திருமொழி உரை
பெருமாள் திருமொழி உரை
திருச்சந்தவிருத்தம் உரை
திருமாலை உரை
திருப்பள்ளியெழுச்சி உரை
அமலனாதிபிரான் உரை
கண்ணிநுண்சிறுத்தாம்பு உரை
பெரிய திருமொழி உரை
திருக்குறுந்தாண்டகம் உரை
திருநெடுந்தாண்டகம் உரை
நான்கு திருவந்தாதிகளின் உரை
திருவிருத்தம் உரை
திருவாசிரியம் உரை
பெரிய திருவந்தாதி உரை
திருவெழுகூற்றிருக்கை உரை
சிறிய திருமடல் உரை
பெரிய திருமடல் உரை
இராமாநுச நூற்றந்தாதி உரை
திருவாய்மொழி உரை
திருவாய்மொழி நூற்றந்தாதி உரை
த்ரமிடோபநிஷத் ஸங்கதி உரை
த்ரமிடோபநிஷத் ரத்நாவளி உரை
த்ரமிடோபநிஷத் ஸாரம் உரை
ஆயிரம் பாசுரங்களுக்கு ஸம்ஸ்க்ருத
ச்லோக-தண்டக-மொழிபெயர்ப்பு
மணவாளமாமுனிகள் வைபவம்
முகுந்தமாலை வியாக்கியானம்
ஸ்தோத்ர ரத்நம் ஷை
ஸுதர்சந சதகம் ஷை
ஸ்ரீரங்கராஜஸ்தவம் ஷை
வரதராஜஸ்தவம் ஷை
ஸ்ரீஸ்தவம் ஷை
அதிமாநுஷஸ்தவம் ஷை
ஸ்ரீவைகுண்டஸ்தவம் ஷை
ஸுந்தரபாஹுஸ்தவம் ஷை
கத்யத்ரயம் ஷை
ஸ்ரீகுணரத்நகோசம் ஷை
வரவரமுநிசதகம் ஷை
வைராக்யபஞ்சகம் ஷை.
தேசிகமங்களம் ஷை
சேஷாவதாரச் சிறப்பு
நமஸ்காரதத்வம்-ஷை விஜயத்வஜம்
ப்ரணவாதிகார தத்வம்
ஸ்தோத்ரவ்யாக்யாந சோதநம்
வாத்ஸல்யார்த்த விவரணம்
பாதுகா ஸஹஸ்ராவதார தத்வம்
வாத்ஸல்ய விஜயத்வஜம்
ப்ரக்ருதிக்கதூஷித்வ பரமார்த்தரக்ஷா
வ்யாமோஹப்ரசமௌஷதம்
திருப்புட்குழிஸ்வாமி வைபவம்
அத்யமேசலோகார்த்த தத்வம்
கூரத்தாழ்வான் வைபவம்
ஸத்ஸம்ப்ரதாயப்படி
பகவத் கதையமுதம்
வாதிபீகர விஜயம்
ஸ்ரீவசனபூஷண ஸாரம்
ஆசார்யஹ்ருதய ஸாரம்
உபந்யாஸ ரத்நமாலா
தர்க்க சாஸ்த்ர ஸர்வஸ்வம்
ரஸிக புதரஞ்சனம்
காஞ்சீ ஹஸ்திகிரி வைபவம்
பரிபந்திபஞ்சபங்கீ
ஆராய்ச்சி மணிமாலை
ரக்ஷாவிலோசந பாவ ப்ரகாசிகா
யாத்ரா ஸ்தோத்ராம்ருதம்
ஸ்ரீராமாயண தண்டகம்
பிள்ளையந்தாதி உரை
வேதாத்யயந ஸர்வஸ்வம்
சாஸ்த்ரஜ்ஞாந சாணபலகம்
பரமார்த்த பரித்ராணம்
அம்ருத லஹரீ
ஹயக்ரீவ சதகம் முதலியன 24
உபதேசரஸாயநம்
உபாக்யாந ரத்நமாலா 16
அத்யமே ச்லோக தத்வப்ரதிஷ்டா
வேதாந்த தேசிகன் வைபவம்
சாரீரக ஸர்வஸ்வம்
தத்வப்ரதிஷ்டா விஜயத்வஜம்
ஸதாசார்ய ஸூக்திரக்ஷா
தேசிகஸூக்தி வித்தாஞ்ஜநம்
தத்வநிவேதநம்.
ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா
கோதாஸ்துதி வியாக்கியானம்.
விஜயத்வஜவைஜயந்தீ
தேசிகஸூக்திபரிமளம்
அத்யமே பத்யார்த்தசததூஷணீ
ஸத்ஸம்ப்ரதாய பரிசுத்தி
ரக்ஷாவிமர்சிகா
ஸ்ரீவரவரமுநி வைபவஸ்தோத்ரம்
ஸ்ரீலோகாசார்யஸ்துதி

திருவாய்மொழி உரை கிடைக்குமிடம்:—T. நாராயணசாமி நாயுடு,
புரொப்ரைடர், நியூமன் பிரஸ் 19, டேவிட்சன் தெரு, ஜி. டி. மதராஸ்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழி—நான்காம்பத்து.

முதல் திருவாய்மொழி—ஒருநாயகம்.

உரையவதாரிகை:—கீழ் மூன்றும்பத்தின் முடிந்த திருவாய்மொழி ஆழ்வார்க்கு அளவுகடந்த ஆனந்தமயமாய்ச் சென்றது. தமக்கு யாதொரு குறையுமில்லையென்பதைப் பன்னிப் பன்னிப் பகர்ந்தருளினர். மற்றுமுள்ள ஸம்ஸாரிகளையும் தம்மைப் போலவே குறைபற்றவர்களாக ஆக்குவதில் மிக்க குதூஹலமுடையரான ஆழ்வார் அவர்களையும் திருத்திப் பணிகொள்ள விரும்பி உபதேசம் செய்யப் புகுகிறார் இத்திருவாய்மொழியில்.

ஒவ்வொரு பத்திலும் பரோபதேசரூபமாக ஒவ்வொரு திருவாய்மொழி அவதரிக்கும். முதற்பத்திலே * வீடுமின் முற்றவும் * என்கிற திருவாய்மொழியும், இரண்டாம் பத்தில் * அணைவதரவணைமேல் * என்கிற திருவாய்மொழியும், மூன்றும் பத்தில் * சொன்னல் விரோதமிது * என்கிற திருவாய்மொழியும் போலே இந்த நான்காம்பத்தில் இத்திருவாய்மொழி உபதேச பரமாய்ச்செல்லா நின்றது.

* சொன்னல் விரோதத்தில் அற்பர்களான மனிசர்களைத் துதிப்பது பெருங்கேடு என்று உபதேசித்தார். உலகில் பலர் நரஸ்துதி செய்யப்புகுவது சில பிரயோஜனங்களுக்காகவாதலால் அந்த ப்ரயோஜனங்கள் அற்பமாயும் அஸ்திரமாயுமிருக்கும்படியை நன்கு எடுத்துக்காட்டவே அவிவேகிகளும் உணர்ந்து திருந்தக்கூடும் என்றுபார்த்து, பகவத்ப்ராப்தி தவிர மற்ற ப்ரயோஜனங்கள் யாவும் அல்பத்வம் அஸ்திரத்வம் முதலிய தோஷங்களினுல் துஷ்டங்களாயிருக்குமாற்றை விரித்துரைக்கின்றார் இத்திருவாய்மொழியில்.

பகவத் கீதையில் ஏழாவது அத்யாயத்தில் (16) "[illegible] சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந!, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப." என்று நான்குவகைப்பட்ட அதிகாரிகள் தன்னைவந்து பற்றுவதாகக் கண்ணபிரான் கூறினன். அவர்கள் யாவரென்னில்; 1. [ஆர்த்தः] இழந்துபோன செல்வத்தை மீண்டும் அடைய விரும்புமவன். 2. [அர்த்தார்த்தீ.] முதலிலேயே செல்வ

மில்லாமையால் புதிதாக அதனையடைய விரும்புமவன். 3. [ஜிஜ்ஞாஸு:] பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மாவை அநுபவிப்பதாகிற கைவல்ய மோக்ஷத்தை விரும்புமவன். 4. [ஜ்ஞாநீ.] 'ஆத்மஸ்வரூபம் எம்பெருமானுக்கே சேஷப்பட்டிருக்குந் தன்மையது' என்கிற அறிவையுடையனாய் ஆத்மாநுபவமாத்திரத்திலே நிற்கமாட்டாமல் எம்பெருமானைப்பெற விரும்பி அவனையே பெரும்பேறாக நினைத்திருப்பவன்.

ஆக இந்நால்வரும் ஸுக்ருதிகள் என்று பேசப்பட்டார்கள். ஞானி தவிர மற்றவர்களை துஷ்க்ருதிகள் என்று பேசவேண்டியிருக்க, ஸுக்ருதிகள் என்று பேசின பகவானுடைய திருவுள்ளம்யாதெனில்; 'அல்பமாயும் அஸ்திரமாயுமிருக்கின்ற ப்ரயோஜநாந்தரத்தை விரும்பினவர்களாகிலும் இந்தப்பலன்களுக்காகப் பிற தெய்வங்களின் பக்கலில் சென்று பல்லைக் காட்டாமல் நம்மிடத்திற்கே வந்து யாசிக்கலானார்களே!' என்கிற உவப்பேயாம். நால்வரையும் வாசியற ஸுக்ருதிகள் என்று சொல்லிவிட்டாலும், ஞானியே சிறந்தவன் என்பதை அந்த கீதாசார்யனே அங்கு மேல் ச்லோகங்களினால் வ்யக்தமாகக் கூறுகின்றான்;—
"தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே ......ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்." [தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விசிஷ்யதே,.... ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்.] இத்யாதி ச்லோகங்கள் காண்க. (இவற்றின் பொருள்:—) இவர்களில் ஞானிதான் மிகவும் சிறந்தவன்; ஏனெனில், அவன் நம்மை யடையவேண்டுமென்று நம்மையே எப்போதும் நாடியவனாய் மற்றொன்றிலும் பற்றின்றி விசேஷமாய் நம்மிடத்தில் பாத்திரம் பக்தியுடையவனாயிருக்கிறான்.......ஞானியானவன் என் ஸ்வரூபத்தைத் தரிக்கின்ற ஆத்மாவென்றே என்னுடைய ஸித்தாந்தம்—என்பதாம்.

இப்படிப்பட்ட ஞானியாக இருந்து வாழ்வதே நன்று என்றும், ஐச்வர்ய கைவல்யங்களில் விருப்பங்கொள்வது பயனற்றது என்றும் பரக்க உபதேசிப்பதே இத்திருவாய்மொழியின் ப்ரமேயமாகும். இதில் ஐச்வரியம் அஸ்திரம் என்னுமிடத்தைப் பல பாசுரங்களாலும், ஸ்வர்க்கபோகத்தினுடையவும் கைவல்ய மோக்ஷத்தினுடையவும் ஹேயத்வத்தை ஒவ்வொரு பாசுரத்தாலும், பகவத்ப்ராப்தியின் உபாதேயத்வத்தைப் பாசுரந்தோறும் அருளிச்செய்கிறார்.

ஒருநாயகமாய் ஓடவுலகுடனாண்டவர் *
கருநாய்கவர்ந்தகாலர் சிதைகியபானையர் *
பெருநாடுகாண இம்மையிலேபிச்சைதாம்கொள்வர் *
திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ. (க)

ஒரு நாயகம் ஆய்	பூமண்டலம் முழுமைக்கும் அத்விதீய ப்ரபுவாய்	கரு நாய் கவர்ந்த காலர்	கரிய நாய்களால் கவ்வப்பட்ட கால்களையுடையவராயும்
ஓட	வெகுகாலமளவும்	சிதைகிய பானையர்	உடைந்த பிச்சைப்பாத்திரத்தையுடையவர்களாயும் ஆகி
உலகுடன்	உலகங்களை யெல்லாம்		
ஆண்டவர்	அரசாட்சி புரிந்தவர்கள் (ஒரு கால[illegible]ரித்ரர்களாகி)		

பெரு நாடு காண	உலகமெல்லாம் திரண்டு வந்து (பரிபவத்தைக்) காணும்படியாக	திரு நாரணன்	ஸ்ரீமந்நாராயணனுடைய
இம்மையிலே	இப்பிறவியிலேயே	தாள்	திருவடிகளை
தாம்	தாங்களே	காலம்பெற	விரைவாக
பிச்சை கொள்வர்	பிச்சையெடுப்பர்; (செல்வத்தின் தன்மை இத்தகையதாதலால்)	சிந்தித்து	தியானித்து
		உய்ம்மின்	உஜ்ஜீவியுங்கோள்.

* * * [ஒருநாயகமாய்.] உலகங்கட்கெல்லாம் ஓரரசாக வீற்றிருந்து வாழ்ந்தவர்களுங்கூட நாளடைவிலே தரித்ரர்களாய்த் தடுமாறும்படியைக் கட்கூடாகக் காணப்பெறலாயிருக்குமாகையாலே நித்ய ஸ்ரீமானான எம்பெருமானைப் பணிவதே பாங்கு என்கிறார்.

உலகங்களெல்லாவற்றிற்கும் ஒருவனே அரசனாயிருக்கும்படி ஸார்வபௌமன் என்று பெயர் பெறும் மஹாப்ரபு ஒருவன்கூட இருக்கமுடியாது; "க்ஷோணீகோணசதாம்சபாலநகலாதுர்வாரகர்வாநலக்ஷுப்யத்க்ஷுத்ரநரேந்த்ர" என்று வைராக்ய பஞ்சகத்திலருளிச் செய்தபடியே பூமியில் ஒவ்வொரு மூலைக்கு ஒவ்வொருவன் அரசனாக அமையக்கூடும்: ஆனாலும் "பதிம் விச்வஸ்ய" என்றும் "நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய்" என்றும் போற்றப்படுகின்ற எம்பெருமானாகவே தம்மைப் பாவித்திருக்கும் அவர்களுடைய அபிமானத்தை யடியொற்றி "ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர்" என்கிறார். உண்மையாகவே அப்படிச் சில அரசர்கள் இருந்தார்களென்றுங் கொள்ளலாம். ஓட என்றது—காலம் நெடுகியோட என்றபடியாய் 'நெடுங்காலம் வரையில்' என்று பொருள்படும். இப்படி நெடுங்காலம் உலகை ஆண்டவர்களுக்கும் இழவு ஸம்பவிக்கும்படியை மேலிரண்டடிகளால் விசித்திரமாக அருளிச் செய்கிறார் கருநாய்கவர்ந்தகாலர் என்று தொடங்கி.

நன்றாகவாழ்ந்தவர்களுக்கும் ஒரு காலத்திலே ஏழைமை வந்து சேருமே; * ஒரு நாளுணவையொழியென்றாலொழியாத வயிற்றின் பசி ஆற்றவொண்ணாதே; 'நெடுநாள் மதிப்போடே ஜீவித்துக்கிடந்த நாம் பிச்சையெடுத்துப் பிழைப்பது முண்டோ? பட்டினிகிடப்போம்' என்று கிடக்கமுடியாதே; வயிறு வளர்க்கையிலுண்டான நசையாலே பிச்சையெடுக்கவே புறப்பட வேண்டிற்றாகும்: முன்பு குறைவின்றியே ஜீவித்துப் போந்தவர்களாகையாலே பலருங்காண வெளியில் புறப்படமாட்டாமல் இருட்டு வேளைகளிலே புறப்படுவர்கள்: இருளோடேயிருளாய்க் கறுத்த நாய்கள் தெருவிலே விழுந்துகிடக்கும்: பிச்சைக்கு இருளிலே செல்லுமிந்த மஹாப்ரபுக்கள் அவைகிடப்பதறியாதே அவற்றின் வாயிலே காலை வைத்திடுவர்கள். அதனால் அவை வருந்திக் கடித்திடும்; உடனே அந்தப் பாதை பொறுக்கமாட்டாமல், கையிலிருந்த பிச்சைப் பானையைக் கீழே நெகிழவிடுவர்கள்; நாய் கடித்த வலியைப் பொறுக்கவில்லாதே கதறவேண்டியிருந்தும், 'கதறினால் நம்மைப் பலரும் கண்டுபிடித்து ஏசுவர்களே'

என்கிற கூச்சத்தினால் வாய் திறவாதிருந்தாலும் பிச்சைப்பானை மேலே விழுந்து உடைந்த ஓசைகேட்டும் நாய் கத்தின ஒலிகேட்டும் ஓடிவந்து காணத் திரண்டதிரள் எண்ணிறந்ததாரும்; இங்ஙனம் பலரும் திரண்டு கண்டு ஏசும்படியாக இப்பிறப்பிலேயே பிச்சைபுகும்படியான நிலைமை நேர்ந்து விடுகின்றதென்பதை மூன்றடிகளாலே கூறி, இதனால் ஐச்வர்யம் அஸ்திரம் என்பதைக் காட்டி, ஈற்றடியினால் நித்யபுருஷார்த்தமான பகவத்ப்ராப்தியிலேயே ஊன்றிப் போரும்படி உபதேசித்தாராயிற்று.

கருநாய் என்பதற்கு—கருக்கொண்டிருந்த நாய் என்றும் பொருள் கூறுவர்; குட்டியிட்டநாய் என்றபடி. என்றும் குட்டியைக் காத்துக்கிடக்கிறதாகையாலே 'அதுக்கு ஏதேனும் தீங்கு வருகிறதோ' என்று கண்டாரையோடிக் கடிக்குமாம். 'வீரக்கழலிட்டகால்' என்று முன்பு விருதாகிக்கிடந்தது; இப்போது 'கடிக்கடித்தகால்' என்னும்படியாயிற்று.

சிதைகியபானையர்— ஒருவர்க்கும் உபயோகப்படமாட்டாத பாத்திரத்தையுடையவர் என்றுமாம். முன்பு பொற்கலத்திலே ஜீவித்தவனுக்கு இப்போது ஒரு புக்கோடு கிடையாதபடியாயிற்று. யாரேனும் ஒரு பிடிசோறு இட்டாலும் தங்காதே ஒரு மூலையாலே கீழே நழுவிப்போம்படி சிதிலமான பாத்திரமேயாயிற்று கிடைப்பது.

பெருநாடுகாண—முன்பு செங்கோல் செலுத்தாநிற்குமளவில் உபஹாரங்கொண்டு காணவருமவர்கள் ஓராண்டு ஆறுமாதமும் உள்ளே புகவும் பெறாதபடி கிடந்துபடுவர்கள்: அவர்கள் இப்போது எளிதாகக் காணலாயிற்று. "முன்பு வெண்கொற்றக்குடையின் நிழலிலே வாழ்ந்தவனுக்கா இக்கதி வந்திட்டது!" என்று சொல்லிக்கொண்டே காண்பதற்கு வந்து கூடுங்கூட்டம் மிகப் பெரிதாயிருக்குமென்று காட்டப்படுகிறது பெருநாடுகாண என்பதனால்.

'மஹாப்ரபுவாயிருந்தது ஒரு பிறவியிலே, பிச்சைக்குத் திரிபவனுகை ஆனது மற்றொரு பிறவியிலே' என்று நினையாமைக்காக இம்மையிலே என்கிறார். பிச்சை—பண்டு பலபல ராஜாக்களுக்கு க்ராமபூமிகள் வழங்கின கையாலே ஒரு கவளம் யாசிக்கலாகிறது!. தாம் கோள்வர்—முன்பு ராஜாக்கள் பலர் கொண்டுவரும் உபஹாரங்களைத் தங்கள் கையாலே நேராக வாங்காமல் ஆளிடுவர்கள்; அன்னவர்கள் இப்போது மேல்விழுந்து பிச்சை பிடுங்குகிறபடி.—ஆதலால் * இடர்கெடுத்த திருவாளனிணையடியே யடைவது நலம்.

எம்பெருமானார் திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ என்கிற விதிலே நோக்காக இத்திருவாய்மொழியைத் திருநாராயணபுரத்துத் திருநாராயணப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்ததாக ஸம்ப்ரதாயம்வல்ல பெரியோர் பகர்வர். இந்தப்பாசுரத்திற்கு ஸம்ஸ்க்ருத ச்லோக மொழிபெயர்ப்பு வருமாறு:— க்ஷோணீசணாமுசலிதீயகதயா ஹ்ராகாமுயஞ்சிஸ யெ தெ க்ருஷெ ந ஸுநா ஹ்ரஷ்ஷ வரணா: ஹ்ருஷ்ஷ விக்ஷாவடா:। சுஷி

ஸேவஹிஜநநி ஷூயஈஷொ ஹ்ருணஞி ஷிக்ஷாம் வஹி: ஸ்ரீநாராயண வாஉ விஞநர தாஸீஷு ஸஉஜீவத ॥ ... ... (க)

உய்ம்மின்திறைகொணர்ந்து என்றுலகாண்டவர் * இம்மையே
தம்மின்சுவைமடவாரைப் பிறர்கொள்ளத்தாம்விட்டு *
வெம்மினொளிவெயில் கானகம்போய்க்குமைதின்பர்கள் *
செம்மின்முடித்திருமாலை விரைந்தடிசேர்மினோ. (உ)

திறை கொணர்ந்து	செலுத்தவேண்டிய கப்பத்தைக் கொண்டு வந்து சட்டி	பிறர் கொள்ள	அயலார் கவர்ந்து கொள்ளும்படி
		விட்டு	கையிழந்து
உய்ம்மின் என்று	'பிழைத்துப்போங்கள்' என்று கட்டளையிட்டுக்கொண்டு	வெம் மின் ஒளி வெயில்	கொடிதாய் மின்னொளி பரக்கின்ற வெயிலையுடைய
		கானகம் போய்	காட்டிலே சென்று
உலகு	இவ்வுலகத்தை	குமை தின்பர்கள்	திண்டாடுவர்கள்: (ஆதலால்)
ஆண்டவர் தாம்	அரசுபுரிந்த பிரபுக்கள் தாம்	செம் மின் முடி	செவ்விய காந்திபெற்ற திருமுடியையுடைய
இம்மையே	இப்பிறப்பிலேயே		
தம்	தங்களுடைய	திரு மாலை	திருமகள் கொழுநனை
இன் சுவை மடவாரை	பரமபோக்யைகளான ஸ்த்ரீகளை	விரைந்து	விரைவாக
		அடி சேர்மின்	அடிபணியுங்கோள்.

* * * [உய்ம்மின்.] மஹாப்ரபுக்களாயிருந்து நெடுங்காலம் தாங்கள் ஆண்ட ராஜ்யங்களையிழப்பர் என்றது கீழ்ப்பாட்டில்; அரசாளுகிறநாளில் போக்யைகளாகக் கைக்கொண்ட மடவார்களையும் பகைவர்க்குப் பறிகொடுத்துப் பரிதாபப்படுவர்களென்கிறார் இதில்

உய்ம்மின் திறைகொணர்ந்து என்று உலகாண்டவர்— எதிரிகளின் ராஜ்யங்களைத் தாங்கள் ஆக்கிரமிக்க நினைத்தால் யானை குதிரைபடை திரட்டிக்கொண்டு சென்று பொருது பரிச்ரமப்பட்டு ஆக்ரமித்துக்கொள்ளுகையன்றிக்கே ஒரு கட்டளை மாத்திரத்தாலேயே க்ருதக்ருத்யர்களாக ஆய்விடுவர்களாம்; அதாவது—'உயிர்தப்பிப்பிழைக்கவேண்டியிருந்தீர்களாகில் நம்பக்கலில் கப்பஞ்செலுத்தி வாழ்ந்துபோங்கள்' என்று ஒரு கட்டளை தெரிவித்தமாத்திரத்திலேயே பகைவர்கள் பணிந்து நிற்பர்களாயிற்று: இவ்வளவு பெருமிடுக்காக உலகத்தை ஆண்ட ஸார்வபௌமர்கள் என்றபடி. திறை என்று கப்பத்திற்குப் பெயர்.

இங்ஙனே வாழ்ந்த மஹாப்ரபுக்கள் ஸமயவிசேஷங்களிலேபடும் எளிவரவை மேல்இரண்டடிகளால் அருளிச்செய்கிறார். தாம் அரசாட்சிபுரிகிற நாளில் பலதிசைகளிலிருந்தும் சிறந்தமாதர்களைத் திரட்டிக்கொணர்ந்து சேமித்துவைப்பதுண்டே; அவர்களையெல்லாம் பகைவர்வந்துபுகுந்து கைக்கொள்ளும்படியாகும். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—"இது நரகபுரமழிந்தவன்று கண்டதிறே; பாண்டவர்களுடைய ராஜஸூயமும் செருக்குமெல்லாம்

கிடக்க த்ரௌபதி ஸதஸ்ஸிலே பரிபூதையானவதுவேயிறே இதில்ப்ரமாணம்” என்பதாம். “மன்று நரகன்றன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து, கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்த கடல்வண்ணன்” என்ற பாசுரத்தினால் நரகாசுரனுடைய இழவு அறியத்தக்கது. பாண்டவர்களின் பரிபவம் ஜகத்ப்ரஸித்தம்.

“கண்டார்வணங்கக் களியானைமீதே கடல்சூழுலகுக்கொரு காவலராய், விண்டோய் நெடுவெண்குடை நீழலின்கீழ் விரிநீருலகாண்டு விரும்புவரே” என்றபடியே வெண்கொற்றக்குடை நிழலிலே இனிதாக வாழ்ந்தவர்கள் அந்த நிலைமையை யிழந்து நகரத்தில் வாழப்பெறுமே மநுஷ்ய ஸஞ்சாரமற்ற மருகாந்தாரங்களிலே சென்று தடுமாறுவார்களென்கிறது என்றபடி. “பொருந்தார் கைவேல்நுதிபோல் பரல்பாய மெல்லடிகள் குருதிசோர, விரும்பாத கான் விரும்பி வெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர” என்ற பெருமாள் திருமொழியினாலும் “மின்னாருருவின் வெண்பேழ் திரிந்து வெளிப்பட்டுக் கல்நிரைந்துதீந்து கழையுடைந்து கால்சுழன்று, பின்னுந் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக் கொன்னவிலும் வெங்கானம்” என்ற பெரிய திருமடலினாலும் காட்டின் கொடுமை அறியத்தக்கது.

கானகம்போய்க் குமைதின்பர்கள்— காடேற வோடினாலும் அங்குந் தொடர்ந்து நலியப் பகைவருடைய ஆட்கள் வந்தே நிற்பவர்களாதலால் காட்டிலும் கொலை தப்பாது என்கிறார்.

குமைதின்பர்கள்— ஹிம்ஸைப்படுவர்களென்றபடி. ஆக மூன்றடிகளாலும் செல்வக்கிடப்பின் சீர்கேட்டை நிரூபித்து ஈற்றடியால் வாழ்ச்சிக்குறுப்பான உபாயத்தை உரைத்தருளுகிறார்; “முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ” என்று பேசலாம்படியாய் * கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியனை எம்பெருமானைக் காலதாமதமின்றி அடிபணியப் பாருங்களென்கிறார்.

இங்கே இன்சுவையே வடிவெடுத்த ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின் ;— “தன்னை ஆச்ரயித்தார்க்குக் கொடுக்கைக்குத் தலையான முடியுண்டு; கொடுப்பிக்கைக்கு அருகே யிருப்பாருமுண்டு: விரையாமையாலுள்ள இழவேயுள்ளது: அவன் முடியைத்தரிலும் நீங்கள் திருவடியைச் சேருங்கோள்; நீங்கள் உங்களடிவிடாதே கொள்ளுங்கோள்.” .... (௨)

அடிசேர்முடியினராகி அரசர்கள்தாம்தொழ *
இடிசேர்முரசங்கள் முற்றத்தியம்பவிருந்தவர் *
பொடிசேர்துகளாய்ப்போவர்கள் ஆதலில்நொக்கென *
கடிசேர்துழாய்முடிக் கண்ணன்கழல்கள்நினைமினே. (௩)

அடி சேர் முடியினர் ஆகி	தமது காலிலேபடிந்த கிரீடத்தையுடையவராகி
அரசர்கள் தாம் தொழ	மஹாப்ரபுக்கள் வணங்கும்படியாகவும்,
இடி சேர் முரசங்கள்	இடியோடு ஒத்த பேரிகைகள்
முற்றத்து	தம் தம் மாளிகைமுற்றத்திலே

இயம்ப	முழங்கும்படியாகவும்
இருந்தவர்	வாழ்ந்தவர்கள்
பொடி சேர் துகள் ஆய் போவர்கள்	பொடியோடு பொடியாய்த் தொலைந்து போவர்கள்;
ஆதலின்	ஆதலால்
நொக்கென	விரைவாக
கடி சேர் துழாய் முடி	நறுமணம்மிக்க திருத்துழாய் மாலையணிந்த திருமுடியையுடைய
கண்ணன்	கண்ணபிரானுடைய
கழல்கள்	திருவடிகளை
நினைமின்	சிந்தியுங்கள்.

* * * [அடிசேர்முடியினர்.] மற்றுள்ள அரசர்கள் தங்களை யடிபணிந்து நிற்க அவர்களை மதியாதே வாழ்ந்தவர்கள் அந்தச் செல்வக்கிடப்பை யிழந்து ஒருவரும் மதியாதபடி யாவர்களென்கிறார். “யேகொ ஸ்வஸ்தாதவ த்ருவஸ்ரவஸ ஸ்ரீவத்ஸாங்கிதெளர்ஜிதே ஸ்ம யஷ்ட்ராஸ்வஸ்தயோஷ்ஸ்மாவஜெளஷா ஸம்பத்யதி ஸதாஸ யஸ்லக்ஷணம் க்ஷேணாணீவாஸுஸ। யத்ஸௌவிஷ்டஸ்ஸ்ஸ் ஸ்ருவணஸமரணோ ஸமஸ்யஸ ஸதவம்கீ.” என்று ஸ்ரீகுணரத்ந கோசத்திலே பட்டர் அருளிச்செய்தது இங்கே முதலடிக்கு அநுஸந்திக்கத் தக்கது. மஹாராஜர்களுக்கு ஸ்துதிபாடகர்கள் துதிமொழிகள் சொல்லும்போது “ஸ்வஸ்தி ஸமஸ்த ஸந்நாயக ஸ்ரீவத்ஸ ஸமந்த ஸர்வஸ்வ ஸ்ரீமஹா ராஜ ஸஹஸ்ரநீவய: வஸுந்தரரக்ஷாதிக வாஹாரவிஜயாஸ்து !” என்று சொல்லி ஏத்துவர்கள்; அப்படியாக விளங்கியிருந்த அரசர்கள்.

“அரசர்கள்தாம் தொழ” என்றவிடத்து ‘தாம்’ என்றது முதல் வேற்றுமைச் சொல்லுருபு என்று தமிழர்கள் சொல்லிப் போருவர்கள்; நம் ஆசாரியர்கள் அதற்கும் ஒரு கருத்து அருளிச் செய்வர்கள்; இங்கு ஈடுகாண்மின் ;—“[தாம் தொழ] தாங்களறிந்ததாகத் தொழுமித்தனை போக்கி இவனிப்படி தொழுதான் என்னும் ப்ரதிபத்தி அவனுக்கில்லை: ‘இன்று ஸ்ரீபாதத்திலே தலைதாக்கத் தெண்டனிடப் பெற்றோம்’ என்று இவர் தாம் நினைத்திருக்குமத்தனை.”—தொழப்படுகிற அரசர்கள் லக்ஷியம் பண்ணுதிருக்க, தொழுமவர்கள் தாங்கள் ஸத்தை பெறுவதாக நினைத்துத் தொழுகிற மாத்திரமே யுள்ளது என்று காட்டினபடி.

இங்ஙனே பல அரசர்கள் தொழச் செய்தேயும் அவர்களை அநாதரித்து ஆடல்பாடல் கண்டு போதுபோக்கிக் கிடக்கும்படியைக் கூறுவது இரண்டாமடி. இடியிடித்தாற்போலே ஒலிக்கின்ற பேரிகைகள் தமது மாளிகை முற்றத்திலே சப்திக்க, அதிலே செவிமடுத்து அந்யபரராய்ச் செருக்கிக்கிடந்தவர்கள் என்றபடி.

பொடிசேர்துகளாய்ப் போவர்கள்— தம் காலிலே குனிந்தவர்களை லக்ஷியம் பண்ணுதிருக்கும்படியான மதிப்பை யுடையராயிருந்தவர்கள், தம்தலையிலே ஒருவன் அடியிட்டால் ‘நாம் இவன் தலையிலே அடியிட்டோம்’ என்று நினைக்கவேண்டாதபடி அற்பமான துகளாய்ப் போவர்கள் என்றபடி. ஆதலால் * சுடர்முடி மேல்புனைந்த தண்ணந்துழாயுடையம்மானது திருவடிகளை விரைவாக நினையுங்கள் என்கிறார்.

முரசம்— முரஜ: என்ற வடசொல் விகாரம். ... ... (௩)

நினைப்பான்புகில்கடலெக்கலின் நுண்மணலிற்பலர் *
எனைத்தோருகங்களும் இவ்வுலகாண்டுகழிந்தவர் *
மனைப்பால்மருங்கற மாய்தலல்லால்மற்றுக்கண்டிலம் *
பனைத்தாள்மதகளிறட்டவன் பாதம்பணிமினே. (௪)

நினைப்பான் புகில்	ஆலோசித்துப் பார்க்குமிடத்து,	மருங்கு அற	சுற்றுப்பக்கங்களோடுங் கூடத் தொலையும்படி
எனைத்தோர் உகங்களும்	அனேகயுகங்கள்	மாய்தல் அல்லால்	அழிந்து போவது தவிர
இ உலகு ஆண்டு கழிந்தவர்	இவ்வுலகத்தையாண்டு முடிந்து போனவர்கள்	மற்று கண்டிலம்	வேறொன்றும் பார்த்தோமில்லை; (ஆதலால்)
கடல் எக்கலில் நுண் மணலில் பலர்	கடலில் எக்கலிட்ட நொய் மணலிற்காட்டிலும் அதிகமான தொகையுள்ளவர்களாவர்;	பனை தாள்	பனைமரம் போன்ற அடியையுடைய
		மத களிறு	(குவலயாபீடமென்னும்) மதயானையை
(எப்படிப்பட்ட பிரபுக்களும்)		அட்டவன்	கொன்றொழித்த கண்ணபிரானுடைய
மனைப் பால்	தாங்களிருந்த வீட்டின் இடம்	பாதம்	திருவடிகளை
		பணிமின்	வணங்குங்கள்.

* * * [நினைப்பான்புகில்] மதிப்பு கெடுவது மாத்திரமன்றிக்கே ஆயுளும் நிலைநில்லாதாகையாலே எம்பெருமான் திருவடிகளை வணங்குங்களென்கிறார். நெடுநாள் இவ்வுலகையாண்டு கழிந்து போனவர்களான ப்ரபுக்கள் எத்தனை பேர்கள் இருப்பார்களென்று நினைக்கத் தொடங்கினால், கடலில் எக்கலிடுகிற நுண்ணிய மணல்களை எண்ணி முடித்தாலும் முடிக்கலாம்; அவர்களை எண்ணி முடிக்கப் போகாது என்னுமித்தனை.—“ஸாவஜஸிநு நிராமுஂவெ காமெ ஸததயா யிநி। நதஜூ-தம் ஷூவஸூாஜி ஷூதிய—ஷெஸூஹவெ யூவா ॥ ஶஂஶா யாஷிகதாயாரா யஶாவஷ—தி வாஸவெ। ஶகூா ஶணயிதுஂ ஜொகெ நவூகீதாஃ விதாஜஹாஃ ॥ ஶணூஜெ வாஂஸவொ ஹஜுஜஹ ஶணூஜெ ஷிவி தாரகாஃ। ஶணூஜெ வஷ—யாராவஹூ நவூகீதாஃ விதாஜஹாஃ.” என்ற ப்ரமாணம் இங்கு அநுஸந்தேயம். நிலத்திலுள்ள புழுதிகளை எண்ணிவிடலாம்; விண்ணிலுள்ள நக்ஷத்திரங்களை யெண்ணிவிடலாம். பெய்யும் மழைத்தாரைகளையும் எண்ணிவிடலாம்; ஆண்டு கழிந்த பிரமர்களை எண்ணித் தலைக்கட்டப் போகாது என்றவாறு.

மனைப்பால் மருங்கற மாய்தலல்லால் மற்றுக்கண்டிலம்= கீழ்ச் சொல்லப்பட்டவர்கள் முடியுமளவில் தாங்கள் இருந்த மனைக்கும் அதன் சுற்றுப்பக்கங்களுக்கும் வாசி தெரியாதபடி அழிந்துபோவது தவிர, வேறுமிருந்திருப்பது ஒன்றுண்டாகக் கண்டிலோம் என்றபடி. பெருமரம் விழும்போது அருகுநிற்கும் மரங்களையும் அழிக்குமாபோலே அக்கம்பக்கத்திலுள்ளவர்களையும் அடியறுத்துக் கொண்டு போகின்றமையைச் சொன்னபடி. ஆதலால், குவலயாபீட மதயானையைக் கொன்றொழித்த பெருமானுடைய திருவடிகளைப் பணியுங்கள் என்கிறார்.

பனைபோன்ற கால்களையுடைய யானை என்றதனால் அதன் அதிபயங்கரத்வம் தெரிவிக்கப்பட்டதாம். கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் வளர்ந்தருள்வதை யறிந்த கம்ஸன் பல அசுரர்களை ஏவி அவனைக் கொல்லப்பார்த்தும் காரிய சித்திபெறுமல் வில்விழவென்கிற வியாஜம் வைத்து ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களை நேரில் வரவழைத்துக் கொன்றிட நினைத்தபோது, குவலயாபீடமென்கிற தனது மதயானையை மதமூட்டி, கண்ணனைக் கொல்லுமாறு அரண்மனை வாசலிலே நிறுத்திவைக்க, அக்ரூரரால் திருவாய்ப்பாடியில் நின்றும் மதுரைக்கு அழைத்துவரப்பட்ட ஸ்ரீக்ருஷ்ண பலராமர்கள் கம்ஸனது அரண்மனையை நோக்கிச் செல்லுகையில் அந்த மதயானை சீறிவர, கண்ணபிரான் அதனை யெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அடித்து அவ்யானையையும் யானைப் பாகனையும் உயிர் தொலைத்தொழித்த வரலாறு அறியத்தக்கது. ... (௪)

பணிமின்திருவருளென்னும் அஞ்சீதப்பைம்பூம்பள்ளி *
அணிமென்குழலார் இன்பக்கலவியமுதுண்டார் *
துணிமுன்புநாலப் பல்லேழையர்தாமிழிப்பச்செல்வர் *
மணிமின்னுமேனி நம்மாயவன்பேர்சொல்லிவாழ்மினே. (௫)

அம் சீதம் பைம் பூ பள்ளி	‘அழகும் குளிர்ச்சியும் விஸ்தாரமுமுள்ள பூம் படுக்கையிலே	பல் ஏழையர் தாம் இழிப்ப	பலமாதர்கள் இழிவாகக் கூறி யேசும்படி
திரு அருள் பணிமின் என்னும்	(மாதர்காள்!) கிருபை பண்ணவேணும்’ என்று பிரார்த்திப்பவர்களாய்	செல்வர்	(பிச்சையெடுக்கப் போவர்கள்; (ஆதலால்)
அணி மென் குழலார் இன்பம் கலவி அமுது உண்டார்	அழகிய மெல்லிய கூந்தலையுடைய மாதர்களின் சிற்றின்பக்கலவியமுதத்தை அனுபவித்தவர்களானவர்கள்	மணி மின்னு மேனி	நீலமணிபோல் மின்னுகின்ற திருமேனியையுடைய
துணி முன்பு நால	அரைத்துணி (பின்பக்கத்திற்கு எட்டம் போராமல்) முன்புறத்தில்மாத்திரம் தொங்கும்படியான ஏழைமையயடைந்து	நம் மாயவன்	எம்பெருமானுடைய
		பேர்	திருநாமங்களை
		சொல்லி	ஸங்கீர்த்தனம் பண்ணி
		வாழ்மின்	வாழுங்கள்.

* * * [பணிமின்திருவருள்.] சிற்றின்பத்தின் நுகர்ச்சியும் அஸ்திரமாதலால் எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லி வாழுங்களென்கிறார். இப்பாட்டின் முன்னடியை அந்வயிப்பதில் நிர்வாஹ பேதமுண்டு; அஞ்சீதப்பைம்பூம் பள்ளியிலே திருவருள்பணிமின என்று அன்புடன் வேண்டுகின்றவர்களான அணிமென் குழலாருடைய இன்பக்கலவி யமுதத்தை யுண்டவர்கள்—என்பது பூருவர்களின் நிர்வாஹம். இப்போது, “பணிமின் திருவருளென்னும்” என்பது அணிமென் குழலாருக்கு விசேஷணமாயிற்று. “பணிமின் திருவருள்” என்பதற்கு—கிருபை பண்ணவேணும் என்று பொருள். இங்ஙனே [illegible] ப்ரார்த்திக்கும்படியாக இருந்து இன்புற்றவர்கள் என்றதாயிற்று.

"பணிமின் திருவருள்" என்று சொல்லுகிற வார்த்தை ஸ்த்ரீகளினுடையது என்று நிர்வஹிப்பதிற்காட்டிலும் அநுபோக்தாக்களான புமான்களுடையது என்றே நிர்வஹிப்பது அழகியது என்று திருவுள்ளம் பற்றிய பட்டர் "பணிமின் திருவருளென்னும்" என்பதை * இன்பக்கலவி யமுதுண்டார்க்கு விசேஷணமாக்கி யுரைப்பராம். கீழே "அடிசேர்முடியினராகி அரசர்கள் தாந்தொழ" என்று மஹாராஜர்களால் தொழுதிறைஞ்சப்படுமவராகக் கூறப்பட்டவர்களுக்கு ஸ்த்ரீகளால் * பணிமின் திருவருளென்னப் பெறுகை ஓர் ஏற்றமல்லாமையாலே, ஸ்த்ரீகளிடத்திலே இவர்கள் 'பணிமின் திருவருள்' என்று விநயந்தோற்றப் பேசியிருந்தபடியாகக் கொள்வது நன்று என்று பட்டர் திருவுள்ளம் போலும். அவ்வரசர்களின் ரஸிக சக்ரவர்த்தித்வத்தைக் காட்டியவாறு.

"பணிமின் திருவருள்" என்று கை கூப்பிக்கொண்டு விண்ணப்பஞ் செய்பவர்களும், அஞ்சீதப் பைம்பூப்பள்ளி அணிமென்குழலாரின்பக்கலவி யமுதுண்டவர்களுமான அரசர்கள்—என்று பொருள் காண்க. "மங்கைமீர்! கிருபை பண்ணியருள வேணும், நங்கைமீர்! அருள் செய்ய வேணும்" என்று பல்பன்னிரண்டையும் காட்டிக்கொண்டு விஷயபோகங்களை யநுபவித்தவர்கள், துணிமுன்பு நாலவும் பல்லேழையர் தாமிழிப்பவும் செல்வர்—; (அதாவது) தாம் அநுபவித்த மாதர்களை வேறுசிலர் கைப்பற்றிக் கிடப்பர்கள்; இவர்கள் தங்களுடைய தேஹயாத்திரைக்காக அவர்களிடத்தே போய் யாசிக்கப் புகுவர்கள்: ஏழைமைக் கொடுமையும் உடன் சேர்ந்து அரையில் துணி எட்டம் போராதே கிடக்கும்; முன்பக்கத்திலே மாத்திரம் குஹ்யத்திற்கு ஆவரணமாகச் சிறிது துணி தொங்காநிற்கும்; இந்த எளிவரவைக்கண்டு அவர்கள் அப்போது தங்களை அபிமானித்திருக்குமவர்களுடைய முகமலர்த்திக்காக ஏளனம் செய்வர்கள்; அதையும் பரம போக்யமாகக் கொண்டு அவ்விடத்தே நடந்து செல்வர்களாம்.

"ஜீர்யந்தி ஜீர்யத: கேசா: தந்தா ஜீர்யந்தி ஜீர்யத:। சக்ஷுஸ்ச்ரோத்ரே ச ஜீர்யேதே த்ருஷ்ணைகா நிருபத்ரவா = ஜீர்யந்தி ஜீர்யத: கேசா: தந்தா ஜீர்யந்தி ஜீர்யத:, சக்ஷுச்ச்ரோத்ரே ச ஜீர்யேதே த்ருஷ்ணைகா நிருபத்ரவா." என்ற ச்லோகம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது. தலை நரைத்தாலும் பற்கள் விழுந்தொழிந்தாலும் கண் இடுங்கிப் போனாலும் காது செவிடாகி யொழிந்தாலும் நப்பாசை யொன்றுமாத்திரம் குறையொன்றுமின்றி வளர்ந்து செல்லும்—என்பது இந்த ச்லோகத்தின் கருத்து.

ஆக இவ்வளவாலும் ஹேயமாகச் சொல்லப்பட்ட விஷயபோகங்களிலே நசையற்று, விலக்ஷண திவ்யமங்கள விக்ரஹம் படைத்த பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லி அதுவே போதுபோக்காக உஜ்ஜீவியுங்கோளென்கிறார் சற்றடியால். ... ... (ரு)

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது மாமழைமொக்குளின்மாய்ந்துமாய்ந்து *
ஆழ்ந்தாரென்றல்லால் அன்றுமுதலின்றறுதியா *
வாழ்ந்தார்கள்வாழ்ந்தேநிற்பர் என்பதில்லை, நிற்குறில் *
ஆழ்ந்தார்கடற்பள்ளி அண்ணலடியவராமினே. (சு)

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது	நன்றாகவாழ்ந்தவர்களென்று நினைக்கப்படுகிறவர்கள் வாழ்ந்த வாழ்வைப் பேசப்புகுந்தால்,	இன்று அறுதி ஆ	இன்றளவரையில்
மா மழை மொக்குளின்	பெருமழையில் தோற்றும் நீர்க்குமிழிபோலே	வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பது இல்லை	வாழ்ந்தவர்கள் ஒரு தன்மையாக வாழ்ந்தேயிருத்தல் கிடையாது;
மாய்ந்து மாய்ந்து	அழிந்தழிந்து	நிற்குறில்	நிலைநின்ற வாழ்வையடைய வேண்டில்,
ஆழ்ந்தார் என்று அல்லால்	அதோகதியையடைந்தனர் என்று சொல்லப்படுவது தவிர,	ஆழ்ந்து ஆர் கடல் பள்ளி	ஆழமாகி நிறைந்த திருப்பாற்கடலில் துயில்கின்ற
அன்று முதல்	ப்ரஹ்மஸ்ருஷ்டி காலம் தொடங்கி	அண்ணல்	ஸ்வாமிக்கு
		அடியவர் ஆமின்	அடிமைப்பட்டிருங்கள்.

* * * [வாழ்ந்தார்கள்.] உலகில் வைத்யர்களுக்கு ஒரு வழக்கமுண்டு; அதாவது—தாம் சிகித்ஸை செய்தவிடங்களில் நூற்றுக்கணக்கான பேர்கள் மாண்டு போயிருந்தாலும், தெய்வவசமாக நாலைந்து பேர்கள் தப்பிப்பிழைத்தவர்களிருந்தால் அவர்களை மாத்திரம் விரலிட்டு எண்ணிக்காட்டி 'அவன் பிழைத்தான், இவன் பிழைத்தான்' என்று சொல்லுவதுண்டு; அதுபோலே, இவ்வுலகில் நன்றாக நெடுக வாழ்ந்தவர்களும் பலர் இருக்க அவர்களை விட்டு, முடிந்தவர்களை எண்ணுகிறதென்? நீடூழி ஜீவித்தவர்களும் இல்லையோ? என்ன; அதற்கு விடை கூறுகின்றாரிப்பாட்டில்—ஸ்ருஷ்டிகாலந் தொடங்கி இன்றளவும் செல்வம் குன்றாமே ஜீவித்தார் ஒருவரையும் கண்டிலோமென்கிறார்.

வாழ்ந்தவர்களாக உங்களால் நினைக்கப்படுகிறவர்கள் வாழ்ந்த அழகு தெரியாதோ? அவர்கள் வாழ்ந்ததும் மழைப்பெருக்கிலுண்டாகும் நீர்க்குமிழி போலே நசித்துநசித்து, ஜீவித்தநாள் பண்ணின பாபத்தாலே அதோகதியிலே விழுந்து ஒழிந்து போனவத்தனை யொழிய, ப்ரஹ்மஸ்ருஷ்டி ஏற்பட்ட காலம் முதல் இன்றளவும் நன்கு ஆராய்ந்து பார்த்துக் கொள்ளலாம்; வாழ்ந்தவர்கள் ஒருபடியாக வாழ்ந்தே போந்தார்கள் என்பது கிடையாது; வாழ்வும் கேடும் கலந்த கட்டியாயிருக்குமே யல்லது ஓரே வாழ்வு என்பது எங்குங் காணக் கிடைக்காது: அங்ஙனன்றிக்கே நிலைநின்ற வாழ்ச்சியை விரும்பியிருந்தீர்களாகில், க்ஷீராப்திசாயனான பெருமானுக்கு அடியவரென்ற பேர்பெற்று வாழப்பாருங்கோள் என்றாராயிற்று.

மாமழைமொக்குளின் = "படுமழைமொக்குளிற் பல்காலுந் தோன்றி" என்ற நாலடியார் (27) செய்யுளுங் காண்க. ஆழ்ந்தார்— தரைப்பட்டார்கள் என்றபடி. மண்ணோடுமண்ணாய்ப் போய்விட்டார்களென்பது கருத்து. நிற்க + உறில் = நிற்குறில்; தொகுத்தல்.

ஆழ்ந்தார் கடற்பள்ளி யண்ணலுக்கு அடியவராகுங்கோள் என்றதன் கருத்து யாதெனில்; எம்பெருமான் * தன்தாளுந்தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பித் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருள்வதானது "குறையின்

தடங்கடல் கோளரவேறித் தன்கோலச் செந்தாமரைக்கண் உறைபவன் போல ஓர் யோகுபுணர்ந்த" என்கிறபடியே சேதநர்கள் வழிபட்டாராவதற்கு என்னவுபாயம் செய்யலாமென்று உபாயசிந்தைபோடே யாதலால் அவன் நினைவு பலிக்கதாம்படி செய்யப்பாருங்கோளென்கை. ... ... (சு)

ஆமின்சுவையவை ஆறோடடிசிலுண்டார்ந்தபின் *
தூமென்மொழிமடவாரிரக்கப் பின்னும்துற்றுவார் *
ஈமினெமக்கொருதுற்றென்று இடறுவராதலின் *
கோமின்துழாய்முடி ஆதியஞ்சோதிகுணங்களே. (எ)

ஆம் இன்சுவை அவை அடிசில் ஆறோடு	பரமபோக்யமாய் ஷட்ரஸோபேதமான அன்னத்தை	எமக்கு ஒரு துற்று ஈமின் என்று	'எனக்கு ஒரு கவளம் கொடுங்கள்' என்று சொல்லிக்கொண்டு
உண்டு ஆர்ந்த பின்	வயிறு நிரவுண்டு தீர்ந்த பின்பும்	இடறுவர்	தடுமாறிச் செல்வர்கள்;
தூ மென் மொழி மடவார் இரக்க	வெகு அழகாகப்பேச வல்ல மாதர்கள் வேண்டிக்கொள்ள	ஆதலின்	ஆதலால்,
(அந்த வேண்டுகோளை மீறமுடியாமல்)		துழாய் முடி	திருத்துழாயையணிந்த திருமுடியையுடைய
பின்னும்	மேலும்	ஆதி அம் சோதி	ஸர்வேச்வரனுடைய
துற்றுவார்	தின்று கொண்டிருந்தவர்கள்	குணங்கள்	திருக்குணங்களையே
(அப்படியிருப்பதற்கான செல்வம் அழிந்தவளவிலே)		கோமின்	சேர்த்து அநுபவியுங்கள்.

* * * [ஆமின்சுவையவை] தேஹ போஷணத்திற்கு ஹேதுவான அன்ன பானம் முதலிய போகமும் அநித்யமாகையாலே ஸகலகாரணபூதனை ஸர்வேச்வரனுடைய திருக்குணங்களை அநுஸந்தியுங்கோளென்கிறார். ஷட்ரஸங்களோடுங் கூடிப் பரமபோக்யமான அடிசிலே வயிறுநிரவுண்டு தீர்ந்தபின்பும் உடனே இனிய மாதர் வந்து ப்ரீதிபாவநை தோற்ற, பின்னையும் உண்ணவேணுமென்று நிர்ப்பந்திக்க, அவர்களுக்காகப் பின்னும் உண்பவர்களாய் இங்ஙனே வயிறு வாழ்ந்தவர்கள் தாங்களே பின்னையொரு காலத்தில் 'எனக்கு ஒருபிடி சோறு இடுவீர்களா?' என்று ஒரு கவளத்திற்கு மன்றாடும்படியாவர்கள்; ஆதலால், திருத்துழாய் மாலையனை எம்பெருமானுடைய திருக்குணங்களை யநுபவித்து நித்ய ஸுகிகளாயிருக்கப் பாருங்களென்றாராயிற்று.

இப்பாசுரத்தின் ஈட்டு ஸ்ரீஸூக்திகள் மிக விநோதம்வாய்ந்தவை; அவை காண்மின்;—"முன்பு இரந்து உண்டு திரிந்தவன் நாழியரிசி பெற்று ஜீவிக்கப் புக்கவாறே ஒரு வெள்ளாட்டியையும் ஸம்பாதித்து 'முதலியார்!' என்னவும் பண்ணி 'அடிசிலுண்ணநின்றார்' என்னவும் பண்ணும்: கண்டதடைய இட்டு வயிற்றை நிரப்பி, உதிரங்குடித்து வாய்விட்ட அட்டைபோலே பெயரவும் திரியவும் மாட்டாதே கிடந்து புரளாநிற்குமே; அவ்வளவிலே இவனுக்கு ஸ்நேஹிநிகளாயிருப்பார் சில ஸ்த்ரீகள் வந்து 'உடம்பு பதர்போலேயிருந்தது; இது கொண்டு எங்ஙனே ரக்ஷ்யவர்க்கமான வெங்களை நோக்கப்பார்க்கிறது?' என்பர்

கள்: அது கேட்டு 'நாம் உண்டிலோமோ!' என்று இவன்தானும் ப்ரமிக்கும். ஒரு திரளையைத் திரட்டி 'இதுவென்? பிடி' என்பர்கள்; பின்னை புஜியாதொழிய மாட்டானே. அப்பேச்சின் இனிமையிலே துவக்குண்டு பின்னையும் புஜியாநிற்கும். இவர்களை [இந்த ஸ்த்ரீகளை] இக்கட்டளையிலே வேறே யொருவன் கைக்கொள்ளுமே; அவர்களையும் முன்புத்தை யிவனைப்போலே இரந்தூட்டா நிற்பர்களே யிவர்கள். அங்கே தன் வயிறுவாழாமல் சென்று 'நீங்களெல்லாருமாக எனக்கொருபிடி தரவேணும்' என்னும். பண்டு நல்லது கண்டால் தன் வாயிலிடாதே இவர்களுக்காக்கிப் போந்தவன் (இப்போது) தன் செல்லாமையாலே எனக்கு என்கிறானிறே. அப்போதை யவனுக்கு ப்ரியமாக அவர்கள் முகம் பாரார்களிறே; பின்னையும் தட்டித் திரிவர்கள். ஆனபின்பு ஜீவனத்தின் நிலையாமை இதுவானபின்பு ஸர்வைச்வர்ய ஸூசகமான திருத்துழாய்மாலையைத் திருமுடியிலே உடையனாய் ஜகத்காரண பூதனாய் நிரவதிக தேஜோரூபமான விக்ரஹத்தை யுடையனாயிருந்துள்ளவனுடைய குணங்களைக் கோமின்—அநுபவியுங்கள்."

ஆறுசுவை— கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு என்பவை. அடிசில், அடுசில் என இரண்டு வகையாகவும் சொல்வடிவ முண்டு; உணவு. ஈமின், கோமின்—முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்கள். 'கோமின்' என்பதில் கோ—வினைப்பகுதி. ... ... (எ)

குணங்கொள்நிறைபுகழ்மன்னர் கோடைக்கடன்பூண்டிருந்து *
இணங்கியுலகுடனாக்கிலும் ஆங்கவனையில்லார் *
மணங்கொண்டபோகத்துமன்னியும் மீள்வர்கள்மீள்வில்லை *
பணங்கொளரவணையான் திருநாமம்படிமினோ. (அ)

குணம் கொள்	குணசாலிகளும்	மணம் கொண்ட போகத்து	மிகநல்ல போகங்களில்
நிறை புகழ்	நிறைந்த கீர்த்தியை யுடையருமான	மன்னியும்	பொருந்தியிருந்தும்
மன்னர்	ராஜகுமாரர்களாய்	மீள்வர்கள்	அதோகதியடைவர்கள்;
கொடை கடன் பூண்டு இருந்து	ஔதார்யத்தைக் கடமையாக ஏறிட்டுக் கொண்டிருந்து	பணம் கொள்	படமெடுத்தாடுகின்ற
		அரவு	ஆதிசேஷனை
இணங்கி	சீலகுணத்தோடுங்கூடி	அணையான்	படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனது
உலகு உடன் ஆக்கிலும்	உலகங்களை ஸ்வாதீனப் படுத்தி ஆண்டாலும்	திரு நாமம்	திருநாமங்களை
ஆங்கு	அவ்விஷயத்தில்	படிமின்	படியுங்கள்; (படித்தால்)
அவனை இல்லார்	அந்த ஸர்வேச்வரனை ஆச்ரயித்தலில்லாதவர்கள்	மீள்வு இல்லை	மீட்சியில்லாத பெருஞ் செல்வம் கிடைக்கும்.

* * * [குணங்கோள் நிறை.] அரசாட்சி புரிவதாகிய போகமும் எம்பெருமானருளாலன்றிக் கிடைக்கமாட்டாதென்றும், அங்ஙனே கிடைக்கின்ற அதுதானும் நிலைநில்லாததென்றுமருளிச்செய்கிறார். அரசர்களின் மேன்மையை யென்ற

ரையடியால் விரித்துரைக்கின்றார். அமையவேண்டிய குணங்களியாவும் அமையப்பெற்றவர்களாயும், உலகமெல்லாம் கொண்டாடும்படியான புகழையுடையவராயும், பரம்பரையாகவே ப்ரபுக்களின் புத்திரர்களாயும், வேண்டினார் வேண்டினபடியே பொருள்களைக் கொடுப்பதாகிற ஔதார்யத்தைக் கடமையாகக் கொண்டவர்களாயும், மேன்மைபாராட்டி இறுமாப்புடனிராதே சீலவான்களாய் உலகத்தோடு பொருந்துமவர்களாயும் வாழ்வார்களெனினும் எம்பெருமானை ஆச்ரயிக்கப் பெறாதவர்கள் கீழ்ச்சொன்ன போகத்திலிருந்து சரிந்துபோவர்; ஆதலால், மோக்ஷப்ரதியான எம்பெருமானுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணுங்கள்; அப்படியாகில் மீட்சியின்றியே நித்யஸ்ரீயாக வாழலாம் என்றாராயிற்று.

அவனையில்லார் என்பதற்கு "அவனையின்றிப் பெறார்" என்று நலிந்து பொருள் கொள்ளுமாம். "அவன் ப்ரஸாதமில்லையாகில் அந்த ராஜ்யஸ்ரீ தான் கிடையாது" என்று சிறுமுதலிய வியாக்கியானங்களில் ஸ்ரீஸூக்தி காண்பதால் இங்ஙனே பொருள் கொள்வது தகுதியென்று சிலபெரியார் கருதுகின்றனர். "அவனையில்லார்—அவனை ஆச்ரயித்தலில்லாதவர்கள், மணங்கொண்ட போகத்து மன்னியும் மீள்வர்கள்" என்றுரைத்தல் பன்னீராயிரப்படியோடு பொருந்தும். திருநாம ஸங்கீர்த்தனத்தில் ஊன்றுமவர்களைத் திருவனந்தாழ்வானைப்போலே அத்தாணிச் சேவகத்தில் எம்பெருமான் அங்கீகரித்தருள்வன் என்ற கருத்துப்பட "பணங்கொளரவணையான் திருநாமம் படிமின்" என்றார். ... (அ)

படிமன்னுபல்கலன்பற்றோடறுத்து ஐம்புலன்வென்று *
செடிமன்னுகாயம்செற்றார்களும் ஆங்கவனையில்லார் *
குடிமன்னுமின்சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்மீள்வில்லை *
கொடிமன்னுபுள்ளுடை அண்ணல்கழல்கள்குறுகுமினோ. (௯)

படி மன்னு	பரம்பரையாக வருகின்ற	குடி மன்னும்	வெகுகாலம் நிலைபெற்றிருக்கும்படியான
பல் கலன்	பலபல ஆபரணங்களையும்	இன் சுவர்க்கம்	இனிமையான சுவர்க்கத்தை
பற்றோடு அறுத்து	ஸவாஸநமாகவிட்டவர்களாய்	எய்தியும் மீள்வர்கள்	அடைந்தும் திரும்புவர்கள்; (ஆதலால்)
ஐம்புலன் வென்று	பஞ்சேந்திரியங்களையும் வசப்படுத்தினவர்களாய்	கொடி மன்னு புள் உடை	கருடத்வஜனை
செடி மன்னு	தூறுமண்டிக்கிடக்கும்படியாக	அண்ணல்	ஸ்வாமியினுடைய
காயம்	சரீரத்தை	கழல்கள்	திருவடிகளை
செற்றார்களும்	தவவிரதங்களால் வெறுக்கின்றவர்களும்	குறுகுமின்	கிட்டுங்கள்; (அப்படியாயின்)
ஆங்கு	அவ்விஷயத்தில்	மீள்வு இல்லை	என்றும் மீட்சியில்லாத பெருஞ்செல்வமுண்டாகும்.
அவனை இல்லார்	அந்த எம்பெருமானை ஆச்ரயித்தலில்லாதவர்கள்		

* * * [படிமன்னு.] கீழ்ப்பாசுரங்களில் இஹலோகஸுகங்களின் ஹேயத்வத்தை அருளிச்செய்துவந்தார். இனி இரண்டுபாசுரங்களில், ஸ்வர்க்கலோக

போகத்தினுடையவும் கைவல்யபோகத்தினுடையவும் ஹேயத்வத்தையருளிச் செய்வாராய், இப்பாட்டில் ஸ்வர்க்கபோகமும் நிலைநில்லாததென்கிறார். சுவர்க்கம் பெறுதற்காகக் கடுந்தவம்புரிவதுண்டு; அத்தவம்புரியுங்கால நிலைமையை ஒன்றரையடியாலருளிச்செய்கிறார். படிமன்னு பல்கலன் பற்றோடறுப்பதாவது—குல பரம்பரையாகத் தங்களுக்குக்கிடைத்த ஆபரணம் முதலிய சிறப்புக்களை அடியோடு துறப்பதாம். ஸ்வர்க்கலோகத்தில் அளவிறந்தபோகங்களை அநுபவிக்கப் பெறவேணுமென்னும் நசையால் இஹலோகபோகங்களை வெறுக்கிறபடி. "ஊன் வாடவுண்ணாது உயிர்காவலிட்டு உடலிற் பிரியாப்புலனைந்தும் நொந்து தான் வாடவாடத் தவஞ்செய்ய" என்றும், "காயோடு நீடுகனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்துதீயுடுநின்று தவஞ்செய்ய" என்றும், "வீழ்கனியுமூழிலையும் என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம்வருந்தித் துன்னுமிலைக்குரம்பைத் துஞ்சியும், வெஞ்சுடரோன் மன்னுமழல்நுகர்ந்தும் வெண்தடத்தினுட்கிடந்தும்" என்றும், "காயிலைதின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித் தீயிடைநின்றும் பூவலம் வந்தும்" என்றுஞ்சொல்லுகிறபடியேயிருந்து கடுந்தவம் புரிகின்றவர்கள் படிமன்னுபல்கலன் பற்றோடறுத்தவர்களாயும் ஐம்புலன் வென்றவர்களாயும் செடிமன்னுகாயஞ் செற்றார்களாயுமிருப்பர்களாயிற்று.

செடிமன்னு காயம் செற்றார்கள்—உடம்பிலே தூறுமண்டும்படியிருப்பவர்கள் என்றபடி. தவத்திற்காக நெடுங்காலம் ஒவ்வொரு ஆஸனத்திலிருந்தால் சலியாமையாலே உடம்பிலே தூறுமண்டிவிடும். இங்கே "நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து, அறியாதிளங்கிரி யென்றெண்ணிப்—பிரியாது, பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும், வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு" என்ற பூதத்தாழ்வார் பாசுரம் நினைக்கத்தகும். (இதன் கருத்தாவது—) திருமலையேறும் வழியில் பலர் வீற்றிருந்து எம்பெருமானை நோக்கித் தவம்புரிகின்றனர்: அப்போது, மூச்சுவிடுதல் உடம்புஅசைத்தல் முதலியன ஒன்றுஞ்செய்யாதே வால்மீகிமுதலிய மஹர்ஷிகளைப்போலே யிருந்ததனால் அவர்களது கூந்தற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்திருக்கவே, பூங்கொடிகளானவை அந்தக்கூந்தலின்மேலே படர்கின்றனவாம், பண்டு வான்மீகிமுனிவர்மீது புற்று மூடினாற்போலே இந்த பக்தர்களின்மீதும் பூங்கொடிகள் படர்ந்திருப்பது அற்புதமானவொரு காட்சியாக அமைந்தது—என்பதாம்.

இவ்வண்ணமாகக் கடுந்தவம் புரிந்தவர்கள் பகவத்ப்ராப்தியையே உத்தேச்யமாகக்கொண்டு தவம்புரிந்தவர்களாயின் நன்றே; இல்லையேல் சுவர்க்கம் சென்றிருந்து "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்கிறபடியே புண்யம் க்ஷயித்தவுடனே கீழே தலைகீழாகத் தள்ளப்பட்டு விழுந்தொழிவர்கள். "பின்னையித்திசைக்கென்றும் புணைக்கொடுக்கிலும் போகவொட்டாரே" என்னும்படி மீள்வில்லாத மஹா புருஷார்த்தத்தைப் பெறவேண்டியிருந்தீர்களாயின் கருள்க்கொடியொன்றுடைய பெருமானது திருவடிகளைப் பணிவது நன்று என்றாராயிற்று.

குறுகுதல்—அணுகுதல்.

குறுகமிகவுணர்வத்தொடுநோக்கி எல்லாம்விட்ட *
இறுகலிறப்பென்னும்ஞானிக்கும் அப்பயனில்லையேல் *
சிறுகநினைவதோர்பாசமுண்டாம் பின்னும்வீடில்லை *
மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில்வீடஃதே. (கo)

குறுக	பட்டிமேயாதபடி மனத்தைக் குறுக்கி	அப் பயன் இல்லையேல்	அந்த பகவதுபாஸநம் இல்லையாகில்,
உணர்வத் தொடு	ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவோடு	சிறுக	அற்பமாக
மிக நோக்கி	நன்றாகச் சேர்ந்து (ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பண்ணி)	நினைவது	நினைப்பதற்குறுப்பான
எல்லாம் விட்ட	(ஐச்வர்யம், பகவதநுபவம் முதலிய) எல்லாவற்றையும் வெறுத்தவனாய்	ஓர் பாசம் உண்டாம்	ஒரு பந்தம் உண்டாகும்;
இறுகல் இறப்பு என்னும்	ஸங்கோச மோக்ஷமாகிய கைவல்யமோக்ஷத்தில் விருப்பங்கொண்டவனான	பின்னும்	அதற்குமேலே
ஞானிக்கும்	ஜ்ஞாநயோக நிஷ்டனுக்கும்	வீடு இல்லை	அந்தக் கைவல்ய மோக்ஷமும் ஒருநாளும் விட்டு நீங்குவதன்று;
		மறுகல் இல்	ஹேயப்ரதிபடனான
		ஈசனை	எம்பெருமானை
		பற்றி	ஆச்ரயித்து
		விடாவிடில்	நீங்காவிடில்
		அஃதே வீடு	அதுவே பரமபுருஷார்த்தம்.

* * * [குறுகமிக.] இப்பாட்டு முதலாக [illegible] நிலைநின்ற மோக்ஷமான கைவல்யத்திலும் பற்றறுக்கைதவிர்த்து பகவத்கைங்கர்யத்தையே பரமப்ராப்யமாகப் பற்றுங்களென்கிறார்.

"மிகவுணர்வத்தொடு எல்லாம் குறுக நோக்கிவிட்ட இறுகலிறப்பென்னும் ஞானிக்கும் அப்பயன் இல்லையேல்" என்றும் அந்வயிப்பது. சிறந்த ஞானத்தையுடையனுப்கொண்டு ப்ராக்ருத போகங்களெல்லாவற்றையும் அற்பங்களாகக் கண்டு அவற்றில் ஆசையைவிட்ட—என்பது முதலடியின் கருத்து. மற்றொரு வகையாகவுமுரைக்கலாம்;—குறுக—மனம் கண்டவிஷயங்களிலும் பரந்து செல்லாதபடி அதனைக்குறுக்கி; ஜிதேந்த்ரியனாகி என்றவாறு. உணர்வத்தொடு—ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவோடே, மிகநோக்கி—நன்றாகப்ரவணமாக்கி; எல்லாம் விட்ட—பகவத்ப்ராப்தியுமுட்பட எல்லாவற்றையும் வெறுத்த—என்றபடி. ஆத்மாநுபவமொன்று தவிர மற்ற எந்த புருஷார்த்தத்தையும் கணிசியாத—என்றதாயிற்று.

இறுகலிறப்பு—இறப்பு என்பது இங்கே மோக்ஷத்தைச் சொல்லுகிறது. இறுகல்—ஸங்கோசம்; பகவதநுபவமாகிற மோக்ஷமானது விகாஸமோக்ஷமென்றும், ஆத்மாநுபவமாகிற மோக்ஷமானது ஸங்கோச மோக்ஷமென்றும் கொள்ளக்கடவது. ஸ்வரூபாநுரூபமான பகவத்கைங்கர்யங்களெல்லாம் நன்றாகச்செய்வதற்கு உறுப்பான மோக்ஷம் விகாஸமோக்ஷம். ஆத்மாநுபவமோக்ஷத்தில் அந்த விகாஸத்திற்கு அவகாசமில்லையன்றே. "ஜராமரணமோக்ஷாய"

என்கிறபடியே மறுபடியும் பிறப்பதும் இறப்பதும் கிடையாது என்கிற இவ்வளவேபயனுதலால் இது ஸங்கோச மோக்ஷமெனத் தகுதியுடையதென்று திருவுள்ளம் பற்றிய ஆழ்வார் இறுகலிறப்பு என்று வெகு அழகாக அருளிச்செய்தார்.

என்னும் ஞானிக்கும்= (இறுகலிறப்பையே) புருஷார்த்தமென்றிருக்கும் ஜ்ஞாநிக்கும் என்றபடி. [ஞானிக்கும்] என்றது—ஜ்ஞாநயோக நிஷ்டனுக்கும் என்றபடி.

அப்பயன் இல்லையேல்— எம்பெருமானை உபாயமாகப் பற்றுதல் இல்லையாகில் என்றபடி. சிறுக நினைவதோர் பாசமுண்டாம்= இழிவான புருஷார்த்தங்களை நினைப்பதற்குறுப்பான கர்மபாசம் மேலிடும் என்றபடி. இங்கே ஆறாயிரப்படி காண்மின்; "ப்ராக்ருதவிஷய வைராக்ய பூர்வகமாக ஜ்ஞாநயோக நிஷ்டனானவனுக்கும் எம்பெருமானை ஆச்ரயிக்காலல்லது ஆத்மாவலோகந விரோதி கர்மம் போகாது; பகவத் ஸமாச்ரயணத்தாலேயாயிற்று ஆத்மாவலோகநம் பிறப்பது." —என்று.

இவ்விடத்தில், த்ரமிடோபநிஷத்பாஷ்யகாரரான ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன் தமது ஒன்பதினாயிரப்படி யென்னும் ஸம்ஸ்க்ருத வியாக்யானத்தில் எழுதியுள்ளதாவது—"அப்பயனில்லையேல் — [illegible]." இதி— இதனால் பூருவாசாரியர்கள், ப்ரகரணத்திற்குப் பொருந்தாதபடி வியாக்யானம் செய்துள்ளார்களென்றும், அங்ஙனன்றிக்கே தாமுரைத்தபடியே வியாக்யானிப்பதே பொருந்துமென்றும் காட்டப்பட்டதாகிறது. இந்த ஸ்வாமி அறுவதினாக்கும் வண்ணமாக எந்தப் பூர்வாசார்யர் வியாக்யானம் செய்தருளியிருக்கிறரென்பது விளங்கவில்லை. திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படி ஸ்ரீஸூக்தியை மேலே எடுத்துக் காட்டியாயிற்று. "எம்பெருமானை சுபாச்ரயமாகப் பற்றுவிடில் ஆத்மாவலோகந விரோதியானகர்மம் போகாதே நிற்கும்." என்பது நஞ்சீயருடைய ஒன்பதினாயிரப்படி ஸ்ரீஸூக்தி. "பகவதுபாஸநமில்லையாகில் ஆத்மாநுஸந்தாநம் பண்ணவொண்ணாது." என்பது பெரியவாச்சான்பிள்ளையின் இருபத்தினாலாயிரப்படி ஸ்ரீஸூக்தி. ஈடுமுப்பத்தாறாயிரப்படி ஸ்ரீஸூக்தியும் இதுவே.

ஆக, ஸகல பூர்வாசார்யர்களும் "எம்பெருமானை அடிபணியாவிடில் கைவல்ய மோக்ஷந்தானும் ஸித்தியாது" என்றே வியாக்யானித்துள்ளார்களேயன்றி "பகவதநுபவபுருஷார்த்தம் ஸித்தியாது" என்று ஒரு பூருவாசாரியரும் வியாக்யானித்தருளவில்லை. இதனை ப்ராஜ்ஞர்கள் பராமர்சிப்பது.

அப்பயனில்லையேல் என்பதற்கு 'பகவதுபாஸநமில்லையாகில்' என்று பொருளாகும்பக்ஷத்தில், பயன் என்கிற சொல்லால் அதனைக்குறித்தது எங்ஙனே

கூடும்? ஸாதநமான உபாஸநத்தை ஹேதுவாகிஸ்வத்தாலே சொல்லலாமோ? என்று ஶங்கை பிறக்கும்; இதற்கு ஸமாதாநத்தைப் பூர்வாசார்யர்களே காட்டியுள்ளார்கள்; பகவதுபாஸநத்தை ஆழ்வார் ஸ்வயம்புருஷார்த்தமாக நினைத்திருப்பவராதலால் இவருடைய கருத்தாலே பயனென்றதத்தனை. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"உபாஸநந்தான் ஸுகரூபமாயிருக்கையாலே பயனென்கிறது; அவனுடைய ஸாதநம் இவருக்கு ப்ரயோஜநமாயிருக்கிறது." என்று.

சிறுக நினைவதோர் பாசமுண்டாம் = இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறலாம்: (1) கைவல்ய ஸித்திக்காகவும் எம்பெருமானை அடிபணியாமல் முயற்சி செய்பவர்களுக்கு 'இவர்கள் மிகவும் க்ஷுத்ரர்கள்' என்று நினைக்கும்படியான கருமபந்தமே உண்டாகும். (2) நிக்ருஷ்ட புருஷார்த்தங்களை ஸ்மரிப்பதற்குறுப்பான ஸங்கம் உண்டாகும்.

பின்னும்வீடில்லை என்பதைத் தனிவாக்யார்த்தமாக யோஜிப்பதிலுங்காட்டில் "மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில் பின்னும்வீடில்லை" என்று யோஜிப்பது சிறக்கும்; ஈட்டின் யோஜனை இதுவே. மறுகலில் என்பதை 'மறுகல் இல்' என்றுபிரித்து ஈசனுக்கு விசேஷணமாக்குதல்; அன்றியே, மறுகலில் என்று ஏழாம் வேற்றுமையாகக் கொண்டு, மறுகுகிற ஸமயத்தில்—ப்ராணவியோக ஸமயத்திலே வருங்கலக்கத்தில் என்று பொருள் கொள்வதுமுண்டு. ('மறுகல் இல்' என்று பிரிக்கும்போது, அகில ஹேயப்ரத்யநீகனான ஈசன் என்றபடி.) ஆக, மறுகலில்—சரமஸமயத்தில், ஈசனைப்பற்றி விடாவிடில்—எம்பெருமானை அநுஸந்திப்பதாகிற அந்திமஸ்ம்ருதி இல்லாமல் இந்கவுடலை விடநேர்ந்தால் என்றபடி. பின்னும்வீடில்லை — அந்த கைவல்ய மோக்ஷம் ஸித்திக்கமாட்டாது. அந்த அதிகாரிக்கு அந்திமஸ்ம்ருதி ஆவச்யகம் என்று காட்டினபடி.

வீடுஅஃதே = "திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ" என்று முந்துறமுன்னம் நான் சொன்னதுவே புருஷார்த்தம் என்றபடி. இங்கே இருபத்திநாலாயிரப்படி காண்மின்;—"இப்படி உபாஸ்யமாகையாலும் ஈச்வரஸாபேக்ஷமாகையாலும் பகவதநுபவத்தைப்பற்றத் தண்ணிதாகையாலும் தண்ணிதானதுதானே ஸ்திரமாகையாலே மிகவும் அபுருஷார்த்தமாகையாலும் அப்ராப்த புருஷார்த்தமாகையாலும் 'அண்ணல்கழல்கள் குறுகுமினோ' என்று கீழ்ச் சொன்ன கைங்கர்யமே புருஷார்த்தம்." என்பதாம்.

கைவல்ய மோக்ஷ விஷயமாகச் சில விவாதங்கள் சாஸ்த்ரஜ்ஞ கோஷ்டியில் உண்டு; அவற்றைப்பற்றின விவரணம் கீழ் முதற்பத்தில் * வீடுமின் முற்றத்தில் * அற்றதுபற்றேனில் என்கிற பாசுரத்தின் தீபிகையிலே நன்கு காணத்தக்கது. [முதல் ஸம்புடம், பக்கம் 92. காண்க.] ... ... (௧0)

அஃதேஉய்யப்புகுமாறென்று கண்ணன்கழல்கள்மேல் *
கொய்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்குற்றேவல் *
செய்கோலத்தாயிரம் சீர்த்தொடைப்பாடலிவைபத்தும் *
அஃகாமல்கற்பவர் ஆழ்துயர்போயுய்யற்பாலரே. (௧௧)

உய்யப் புகும் ஆறு	உஜ்ஜீவநோபாயம்	செய்கோலத்து	ஸர்வாலங்கார ஸம்பந்நமாயுமிருக்கிற
அஃதே என்று	திருநாரணன் தாள்களேயென்று அறுதியிட்டு	ஆயிரம்	ஆயிரந்தொகையுள்ள
கண்ணன்	எம்பெருமானுடைய	சீர் தொடை பாடல்	திருக்குணங்களை யிட்டுத் தொடுத்த மாலை போன்ற இப்பாடலில்
கழல்கள் மேல்	திருவடிகள் விஷயமாக,		
கொய் பூ பொழில் சூழ்	கொய்வதற்குரிய பூக்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட	இவை பத்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
		அஃகாமல்	குறைவின்றி
குருகூர்	திருநகரிக்குத் தலைவரான	கற்பவர்	ஓதுமவர்கள்
		ஆழ் துயர் போய்	ஆழ்ந்ததுயர் நீங்கப்பெற்று
சடகோபன்	ஆழ்வாருடைய		
குற்றேவல்	வாசிக கைங்கர்யரூபமாயும்	உய்யற்பாலர்	உஜ்ஜீவிக்குந் தன்மையையுடையராவர்.

* * * [அஃதேயுய்ய.] துயரங்கள் தீர்ந்து ஆத்மோஜ்ஜீவநம் பெறுவதே இத்திருவாய்மொழி கற்பதற்குப் பலன் என்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். எம்பெருமானது திருவடிகளே உபாயமென்று அத்திருவடிகள் விஷயமாக ஆழ்வார் வாசிக கைங்கர்யரூபமாய் அருளிச் செய்ததும் ஸர்வாலங்கார பூர்ணமுமான ஆயிரத்தினுள் இவைபத்தையும் குறையறக் கற்பவர்கள் ஐச்வர்ய கைவல்யங்களிலே ஆழங்காற்பட்டுவரும் க்லேசம்நீங்கி பகவத்கைங்கர்ய மஹாரஸத்தைப் பெறுவாரென்றதாயிற்று.

அஃதே என்றது—இப்பதிகத்தின் முதற்பாட்டிலும் இப்பாட்டிலும் ப்ரஸ்துதமான திருவடியைக் குறிக்கும்.

செய்கோலத்தாயிரம் என்றவிடத்து, "உதாத்தாதி பதக்ரம ஜடாவாக்ய பஞ்சாதி பாதவ்ருத்த ப்ரச்நகாண்ட அஷ்டகாத்யாயாம்ஶபர்வாதி அலங்காரங்கள்போலே எழுத்தசைசீர்ப்பந்தமடி தொடை நிரைநிரையோசை தளையினம் யாப்புப் பாத்துறை பண்ணிசைதாளம் பத்துநூறுயிரம் முதலான செய்கோலமிதுக்குமுண்டு" என்ற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தியும் அதன் வியாக்கியானமும் அநுஸந்தேயம்.

உய்யப்பாலரே என்ற பாடத்திலும் 'உய்யற்பாலரே' என்ற பாடம் தகுமென்று அழகிய மணவாளச்சீயரருளிச் செய்யக் கேட்டிருக்கை. (௧௧.)

முதல் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ஸ்ரீமந்நாராயணத்வாத் ஸ்வமகுடகுணகாத் வீரதாமாங்கமௌலே:
துர்தாந்தாராதிஹந்த்ருரத்புதநியததநோ: கல்பபாதோதிதல்பாத் ।
விஶ்வாத்மஜ்யோதிஷோர்வீதரபணிஶயநாத் வேதரூபஸ்வகேதோ:
நிர்தூதாஶேஷதோஷாத் ப்ரதமமபிததே ஶ்ரைமைஶ்வர்யலக்ஷ்மீ ॥

ஒருநாயகமென்கிற முதல் திருவாய்மொழியில் [ப்ரதமம் ஸ்ரைமைஶ்வர்யலக்ஷ்மீ கமிதம்—ராஜ்ய ஸ்வர்க்கைச்வர்யாதிகள்] எம்பெருமானொருவனே நிலைநின்ற ஐச்வர்யத்திற்கு எல்லைநிலமாக அருளிச் செய்யப்பட்டான் என்கிறார்.

1. ஸ்ரீமந்நாராயணத்வம். * திருநாரணன்தாள் * பெரிய பிராட்டியோடு பிரிவில்லாத நாராயணன்.

2. ஸ்வாம்யகுணமகுட:. * செம்பொன்முடித்திருமாலை * ஸ்வாமியான நிலைமைக்குத் தகுதியான திருமுடியையுடையவன்.

3. வீரதாமாங்கமௌலி:. * கடிசேர்துழாய்முடிக்கண்ணன் * ஸர்வாதிகத்வஸூசகமான திருத்துழாய்மாலையை அடையாளமாகவுடைய திருமுடியையுடையவன்.

4. துர்தாந்தாராதிஹந்தா. * பனைத்தாள்மதகளிறட்டவன் * மதத்தாலே கொழுத்த குவலயாபீடமென்னுமாகிற விரோதியைத் தொலைத்தவன்.

5. அத்புதநியததநு:. * மணிமின்னுமேனிநம்மாயவன் * ஆச்சரியமான திருமேனியையுடையவன்.

6. கல்பபாதோதிதல்ப:. * ஆழ்ந்தார் கடற்பள்ளியண்ணல் * பிரளய காலத்திலே ஏகார்ணவத்தைப் படுக்கையாகவுடையவன்.

7. விச்வாத்மஜ்யோதி:. * ஆதியஞ்சோதி * ஸர்வ காரணபூதனைச் சோதிவடிவானவன்.

8. உர்வீதரபணிசயந:. * பண்கொளரவணையான் * பூமியைத்தாங்குகின்ற திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவன்.

9. வேதரூபஸ்வகேது:. * கொடிமன்னுபுள்ளுடையண்ணல் * வேதரூபியான பக்ஷிராஜனைக் கொடியாகவுடையவன்.

10. நிர்த்தூதாசேஷதோஷ:. * மறுகலிலீசனை * ஹேயப்ரத்யநீகனையுள்ளவன்.—ஆக இப்படிப்பட்ட எம்பெருமானொருவனே நிரவதிக ஐச்வர்யத்தையுடையவன்; மற்றையோரனைவரும் அல்பமும் அஸ்திரமுமான ஐச்வர்யத்தையுடையவர்கள் என்று கூறப்பட்டது. ... ... (*)

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஶ்ருத்வா வ்ருத்தாந்தமேதத் உபயே ஸமஸ்தா:
த்ருஷ்ட்வா ஸம்ஸாரஹிதம் உபயா விஷ்வண்ண: ।
ராஜ்ய ஸ்வர்காதி போக ஸம்பந்ந ஸர்வ
ஸர்வஜ்ஞோ ஹ்ருதிஸேவ பூர்வ போக: ॥

(கருத்து.) கீழ்த் திருவாய்மொழியில் அங்ஙனே ஆனந்தம் பூரித்துப் பேசின ஆழ்வார், மற்றுமுள்ளாரையும் தம்மோடே சேர்த்துக்கொண்டு அநுபவிக்க விரும்பி அவர்களைத் திருத்திப் பணிகொள்வதற்காக ஹிதோபதேசம் செய்யப்புகுந்து, ராஜ்ய போகமென்ன, ஸ்வர்க்க போகமென்ன, ஆத்மாநுபவமென்ன இவற்றினுடைய அல்பாஸ்திரத்வங்களை நான்காம்பத்தின் முதல் திருவாய்மொழியில் நன்கு நிரூபித்து எம்பெருமானொருவனே பரம புருஷார்த்தமென்றருளிச்செய்தார்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஒருநாயகமாய் உலகுக்குவானோர்
இருநாட்டி லேறியுய்க்கு மின்பம்—திரமாகா
மன்னுயிர்ப்போகம் தீது மாலடிமையேயினிதாம்
பன்னியிவை மாறனுரைப் பால்.

உலகுக்கு	இவ்வுலகுக்கெல்லாம்
ஒரு நாயகம் ஆய்	ஏகாதிபதிகளாய்க் கொண்டு
உய்க்கும்	அநுபவிக்கின்ற
இன்பம்	ஆனந்தமும்
வானோர் இருநாட்டில் ஏறி உய்க்கும் இன்பம்	தேவர்களுடைய விசாலமான சுவர்க்கபோகத்திற் சென்று அநுபவிக்கும் ஆனந்தமும்
திரம் ஆகா	நிலை நிற்கமாட்டா;

மன்	நித்யமான	மாறன்	ஆழ்வார்
உயிர் போகம்	ஆத்மாநுபவமாகிற கைவல்யமானது	பன்னி	விரிவாக
		உரைப்பால்	அருளிச் செய்ததனாலே
தீது	ஸ்வரூபத்திற்குச் சேராதது;	மால் அடிமையே	எம்பெருமானுக்கு அடிமை செய்வதே
இவை	என்கிற இவ்வர்த்தங்களை	இனிது ஆம்	போக்யமாயிருக்கும்.

இவ்வுலகம் முழுவதையும் ஏகச்சத்ராதிபதிகளாய் ஆண்டு அநுபவிக்கும் இன்பமும், ஸ்வர்க்கலோகம் புக்கு அநுபவிக்கும் இன்பமும் ஸ்திரமாக நிற்கமாட்டாதவை; கைவல்ய மோக்ஷமாகிற ஆத்மாநுபவமானது ஸ்திரமாயிருக்கக்கூடியதாயினும் பரப்ரஹ்மாநுபவத்தைப் பற்றச் சிற்றின்பமாயிருக்கும்; ஆதலால், பகவத்விஷயத்தில் செய்யும் அடிமையொன்றே இனியதாகும்—என்று ஆழ்வார் விரிவாக அருளிச்செய்தாரென்றதாயிற்று.

திரம்— ஸ்திரம் என்ற வடசொல் விகாரம். போகம்—ஹோக மென்ற வடசொல் விகாரம்.

(௲க)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து—இரண்டாந் திருவாய்மொழி,

பாலனாய்.

உரையவதாரிகை:—கீழ் மூன்றாம்பத்தில் * முடியானே யென்னுந் திருவாய்மொழியில் ஆழ்வார்க்கு உண்டான அவஸ்தை ப்ராஸங்கிகமான மூன்று திருவாய்மொழிகளாலே ஒருவாறு தலை மடிந்து கிடந்தது இப்போது தலையெடுத்து நிற்கின்றது.

ஸ்ரீவிபீஷணாழ்வான் ராவணனுக்குச் சொன்ன ஹிதம் அவனுக்கு உபயோகப்படாமல் தனக்குப் பெருமாளைப் பற்றுகைக்கு உறுப்பானாப்போலவும், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் இரணியனுக்குச் சொன்ன ஹிதம் அவனது நெஞ்சிற் படாதே தனக்கு பகவத்பக்தி மிகுதற்கு உறுப்பானாப்போலவும் ஆழ்வார் செய்தருளும் பரோபதேசங்கள் பிறர்க்கு உறுப்பன்றிக்கே தமக்கு எம்பெருமான் பக்கலிலே அபிநிவேசம் மீதூர்ந்து செல்வதற்கே ஹேதுவாயிற்று. ஆகவே

நித்யத்வாநித்யத்வ

---

1. ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்கும் பேதம்.

2. ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதம்.

3. அசித்திற்காட்டில் சித்துக்குண்டான வாசி—என்கிற இம்மூன்று விஷயங்கள் தத்வவிவேக மென்பதனால் விவக்ஷிதம். "நத்வேவாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா:। நசைவ நபவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்." (கீதை 2-12) என்கிற ச்லோகத்தில் ஸர்வேச்வரனை தன்னைப் போலவே ஸகலாத்மாக்களும் நித்யர் என்கிறது. இங்கே அஜ்ஞானத்தாலே மயங்கிக்கிடந்த அர்ஜுனனுக்கு அந்த மருள் தீருகைக்காக யதார்த்தமான ஆத்மாவினுடைய நித்யத்வத்தை யுபதேசிக்கிறபோது 'நான், நீ, இவர்கள்' என்று பிரித்தருளிச் செய்வதை நோக்குங்கால், பரமாத்மாவும் ஜீவாத்மாக்களும் வெவ்வேறுபட்டவர்கள் என்னும்படியான ஜீவபரபேதமும், ஆத்மாக்களுக்குள் ஒருவர்க்கொருவர் உண்டான பேதமும் ஸத்யமே யொழியக் கல்பிதமல்லவென்று எம்பெருமானே அருளிச் செய்ததாய்த் தெரியவருகிறதென்று பாஷ்யகாரர் நிரூபித்தருளினர். "தேஹிநோऽஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா। ததா தேஹாந்தரப்ராப்தி: தீரஸ்தத்ர ந முஹ்யதி।" [தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தரப்ராப்தி: தீரஸ் தத்ர ந முஹ்யதி.] என்ற அதற்கடுத்த ச்லோகத்தில், ஒருவனுக்குத் தன் தேஹத்தில் பால்யதசை நீங்கி யௌவனம் முதலிய தசைகள் வந்த மாத்திரத்தினால் அவன் தானழிந்து போனதாக நினைத்து வருந்தாதாப் போலே புத்திசாலியான புருஷன் தனக்கு வேறு தேஹம் வந்தாலும் அதுவிஷயத்தில் சிறிதும் வருந்தமாட்டானென்று சொல்லப்பட்டுளது. இதில் 'தேஹிநஃ, தேஹே' என்ற பதங்களினால் ப்ரக்ருத்யாத்ம விவேகம் செய்ததாக அறியக்கடவது.

இங்ஙனே தத்வ விவேகம் கீதையில் செய்ததுபோலத் திருவாய்மொழியிலும் "அடியேனுள்ளான்" என்கிற விடத்தில் ஸாக்ஷாத்தாக ஜீவாத்ம பரமாத்ம பேதமும், அர்த்தமாக ஜீவர்களுக்குப் பரஸ்பர பேதமும், "சென்று சென்று பரம்பரமாய்" என்று ஆத்மாவுக்கு தேஹாதி விலக்ஷணத்வத்தைச் சொல்லுகையாலே ப்ரக்ருத்யாத்ம விவேகமுமாகிற தத்வவிவேகம் செய்யப்பட்டமை காண்க.

[நித்யத்வ அநித்யத்வ] "அந்தவந்த இமே தேஹா: நித்யஸ்யோக்தா: சரீரிண:। அநாசிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத॥" [அந்தவந்த இமே தேஹா: நித்யஸ்யோக்தாச் சரீரிண:, அநாசினோப்ரமேயஸ்ய ...

4927 21.12.37 ... 37-12-8

மாத் யுத்யஸ்வ பாரத !.] (2-18) இத்யாதிகளான கீதாச்லோகங்களாலே ஆத்மாக்களின் நித்யத்வமும் தேஹங்களின் அநித்யத்வமும் சொல்லப்பட்டது போலே, திருவாய்மொழியிலும் "மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்" "உள்ளதுமில்லதும்" இத்யாதி பாசுரங்களினால்.

[நியந்த்ருத்வ] "[illegible] திஷ்டதி। [illegible] மாயயா ॥" [ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந ! திஷ்டதி, ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா.] (18-61) என்கிற கீதாச்லோகத்தினால் ஸர்வேச்வரனுடைய நியாமகத்வம் [ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் பண்ணுவித்தல்] சொல்லப்பட்டதுபோல, திருவாய்மொழியில் "நின்றனரிருந்தனர்" இத்யாதி பாசுரத்தினால்.

[ஸௌலப்ய.] "[illegible]" [தஸ்யாஹம் ஸுலப: பார்த்த ! நித்யயுக்தஸ்ய யோகிந:] (8-14) "[illegible] ॥" [பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே.] (4-8) இத்யாதி கீதா ச்லோகங்களினால் பக்திபாங்கள் நிமித்தமாகவும் அவதார ப்ரயுக்தமாகவுமுண்டான அவன் ஸௌலப்யம் சொல்லப்பட்டதுபோல, திருவாய்மொழியிலும் "பத்துடையடியவர்க் கெளியவன்" "பலபிறப்பாய்-ஒளிவருமியல்வினன்" இத்யாதி பாசுரங்களினால்.

[ஸாம்ய] "[illegible]" [ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: 9-29.] என்பதனால் அவனுடைய ஆச்ரயணீயத்வே ஸர்வஸாம்யம் கீதையில் சொல்லப்பட்டதுபோல, திருவாய்மொழியிலும் "பற்றிலனீசனும் முற்றவும் நின்றனன்" என்ற பாசுரத்தில் * முற்றவும் நின்றனன் * என்பது முதலியவற்றால் ஸர்வஸாம்யம் சொல்லப்பட்டது. "முற்றவும் நின்றனன்" என்பதற்குப் பலவகையான பொருள்கள் தோன்றும்; 'அறிவு ஒழுக்கம் ஜாதி முதலியவற்றால் ஏற்றத்தாழ்வு பெரிதுமுடைய எவ்வகுப்பினர்க்கும் ஒருங்கே ஆச்ரயணீயனாக நின்றான்' என்னும் பொருளே முக்கியமென்பது இவ்வாசிரியரின் கருத்து.

[அஹங்காரதோஷ.] கீதையில் (3-27) "[illegible]" [ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச:; அஹங்காரவி

மூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே." என்று அஹங்கார தோஷம் சொல்லப்பட்டதுபோல, திருவாய்மொழியிலும் 'நீர்நுமதென்றிவை வேர்முதல்மாய்த்து" என்ற பாசுரத்தினால்.

[இந்த்ரியபல] கீதையில் (2-60) "[illegible]" [யததோ ஹ்யபி கௌந்தேய! புருஷஸ்ய விபச்சித:, இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:" என்று இந்திரிய ப்ராபல்யம் சொல்லப்பட்டது போல, திருவாய்மொழியிலும் "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறுமைம்புலன்" என்ற பாசுரத்தினால்.

[மந:ப்ராதாந்ய.] கீதையில் (6-34) "[illegible]" [சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ! ப்ரமாதி பலவத் த்ருடம், தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்." என்றும் (6-35.) "[illegible]" அஸம்சயம் மஹாபாஹோ ! மநோ துர்நிக்ரஹம் சலம், அப்யாஸேந து கௌந்தேய ! வைராக்யேண ச க்ருஹ்யதே." என்றும் மற்றை யிந்திரியங்களிற் காட்டிலும் மநஸ்ஸினுடைய ப்ராதாந்யம் சொல்லப்பட்டது போல, திருவாய்மொழியிலும் "மனத்தை வலித்து" என்பதனால் மநோநியமநத்தின் அருமை சொல்லும் முகத்தால் மந:ப்ராதாந்யம் தெரிவிக்கப்பட்டது

[கரணநியமந] கீதையில் (2-61.) "[illegible]" [தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர:, வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா." என்றும், "[illegible]—ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்ய ச" என்றும் கரண நியமநம் சொல்லப்பட்டது போல, திருவாய்மொழியிலும் "உள்ளமுரை செயலுள்ள விம்மூன்றையும் உள்ளிக்கெடுத்து" என்றதனால்.

[ஸுக்ருதிபேத.] கீதையில் (7-16) "[illegible]" சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந !, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப !." என்று ஸுக்ருதிகளின்

பேதம் சொல்லப்பட்டது போல, திருவாய்மொழியிலும் * ஒருநாயகத்தில், 'பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாங் கொள்வர்'' என்கையாலே ஆர்த்த ஞன ப்ரஷ்டைச்வர்ய காமன், ''குணங்கொள் நிறைபுகழ் மன்னர்'' இத்யாதியாலே அர்த்தார்த்தி யான அபூர்வைச்வர்ய காமன், ''இறுகலிறப் பென்னும்'' என்கையாலே ஜிஜ்ஞாஸுவான கேவலன், ''திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்துய்மின்'' என்கையாலே ஜ்ஞாநியாகிற பகவச்சரணார்த்தி என்கிற சதுர்வித ஸுக்ருதிபேதம் காட்டப்பட்டது.

[தேவாஸுரவிபாக.] கீதையில் (16-6.) ''த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச—த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச.'' என்றும் (16-5) ''தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா—தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா.'' என்றும் தேவாஸுரவிபாகம் செய்யப்பட்டது போல, திருவாய்மொழியிலும் ''அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல்'' என்றும் ''நண்ணுவசுரர்—நல்லவமரர்'' என்றுமுள்ள பாசுரங்களினால்.

[விபூதியோக] கீதையில் (10-19) ''ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே—ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்மந: சுபா:, ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே.'' என்று தொடங்கி விபூதியோகம் சொல்லப்பட்டதுபோல, திருவாய்மொழியிலும் * புகழுநல்லொருவன், * நல்குரவுஞ் செல்வும், * மாயாவாமனன் என்கிற திருவாய்மொழிகளால்.

[விச்வரூபதர்சந] கீதையில் (11-15) ''பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷஸங்காந், ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச திவ்யாந்— பச்யாமி தேவாந் தவ தேவ! தேஹே ஸர்வாந் ததா பூதவிசேஷஸங்காந், ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம் ருஷீம்ச்ச ஸர்வாந் உரகாம்ச்ச திவ்யாந்.'' இத்யாதியாலே விச்வரூபதர்சநம் சொல்லப்பட்டது போல, திருவாய்மொழியில் ''நீராய் நிலனாய்த் தீயாய்க்காலாய் நெடுவானாய்ச் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனானாய்'' என்பதனால்.

[ஸாங்கபக்தி.] கீதையில் (9-34) ''மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு। மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:— மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு, மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:.'' என்று அங்கஸஹிதமான பக்தி சொல்லப்பட்டதுபோல,

190. அது தத்வோபதேசம் ; இது தத்வதர்சி வசநம்.

திருவாய்மொழியிலும் ''வணக்குடைத்தவநெறிவழிநின்று புறநெறி களைகட்டு, உணக்குமின்பசையற'' என்றும் ''மேவித் தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனித இருக்கை, நாவிற்கொண்டு அச்சுதன்றன்னை ஞானவிதி பிழையாமே'' என்றும், ''மாலைநண்ணி—காலைமாலை கமலமலரிட்டு—தொழுதெழுமினோ'' என்றுமுள்ள பாசுரங்களினால்.

[த்விவிதப்ரபத்தி.] அங்கப்ரபத்தி யென்றும் ஸ்வதந்த்ரப்ரபத்தி யென்றும் ப்ரபத்தி இருவகைப்படும். பக்திக்கு அங்கமாக அனுஷ்டிக்கப்படும் ப்ரபத்தி அங்கப்ரபத்தியாகும்; அங்ஙனன்றிக்கே ஸ்வதந்திரமாகவே அனுஷ்டிக்கப்படும் ப்ரபத்தி ஸ்வதந்த்ரப்ரபத்தி யெனப்படும்: கீதையில் (7-14) ''தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா। மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே—தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே.'' என்றும் (18-62) 'தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத—தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத.'' என்றும் சொல்லப்பட்டுள்ள ப்ரபத்தி அங்கப்ரபத்தி; ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ—ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ. (18-66) என்னப்பட்ட ப்ரபத்தி ஸ்வதந்த்ரப்ரபத்தி அதுபோல் திருவாய்மொழியில் ''உணக்குமின்பசையற அவனுடையுணர்வு கொண்டுணர்ந்தே'' என்று அவனருளிச் செய்த ப்ரபத்தி ரூபஜ்ஞானத்தை ஸஹாயமாகக் கொண்டு அத்தையறிந்து என்கையாலே பக்திக்கு அங்கமான ப்ரபத்தியும், ''மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம்'' ''சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்'' என்பவற்றாலே ஸ்வதந்த்ரப்ரபத்தியும் பேசப்பட்டன. ஆக இங்ஙனம் திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தங்களின் ஸாம்யத்தைக் கொண்டு ''மாயனன்றோதிய வாக்கு'' என்று திருமழிசைப்பிரானால் அன்றோதிய வாக்காகக் கூறப்பட்ட கீதையோடொக்கச் சொல்லப்படும்.

[கீதையிற் காட்டில் திருவாய்மொழிக்குண்டான ஏற்றம்.]

190 [கீதையோடு திருவாய்மொழிக்குண்டான ஸாம்யம் சொல்லப்பட்டது கீழ்; கீதையிற்காட்டில் திருவாய்மொழிக்குண்டான மேன்மை இனி அநேக ஹேதுசகளால் மூதலிக்கப்படுகிறது ; முதலில் வக்த்ரு வைலக்ஷண்யத்தால் வந்த ஏற்றம் நிரூபிக்கப்படுகிறது.) அது தத்வோபதேசம், இது தத்வதர்சிவசநம். = 'தத்வோபதேசம்' என்பதற்கு—தத்வங்களை உபதேசிக்குமது என்று அர்த்தம் தோன்றும்; அது இங்கு விவக்ஷிதமன்று; ''தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகை:। தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயண: ப்ரபு:— தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ் ஸர்வதோமுகை:, தத்வ

191. அது ஐவரை வெல்வித்துப் பதிற்றைந்திரட்டி படச்சோன்னது. இது

மேகோ மஹாயோகி ஹரிர் நாராயண: பர:" என்கிறபடியே தத்வபூதனை எம்பெருமான்தானே உபதேசித்தது கீதை; திருவாய்மொழியோ வென்னில், தத்வ தர்சிகளில் தலைவரான ஆழ்வாரருளிச் செய்தது. ஆகையாலே கீதையிற்காட்டிலும் திருவாய்மொழியே ஏற்றமுடையது என்று இங்கு விவக்ஷிதம்.

'ஸர்வ சேஷியான எம்பெருமானருளிச் செய்ததன்றோ ஏற்றமுடையதாக இருக்கத்தக்கது' என்று சிலர் விபரீதமாக நினைக்கக்கூடும். இங்கு உண்மையாதெனில்; கீதையிலே "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா । மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய ॥ அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா, மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய!" என்றும், "மாமேகம் சரணம் வ்ரஜ." [மாமேகம் சரணம்வ்ரஜ] என்றும் இங்ஙனே பல ச்லோகங்களால் எம்பெருமான் தன்னுடைய வைபவத்தைத் தானே அருளிச் செய்கிறான்; தன் பெருமையைத் தானே சொல்லிக்கொள்ளுமளவில் மந்த மதிகளுக்கு அதில் விச்வாஸம் பிறப்பது அரிது. அந்த கீதையில்தானே "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா । உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந: ॥ தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:" என்று ஜ்ஞாநோபதேசத்திற்கு ஆப்ததமாக அந்த எம்பெருமானாலேயே அருளிச் செய்யப்பட்ட தத்வதர்சிகளில் தலைவரான ஆழ்வார் "மண்ணும் விண்ணுமெல்லா முடனுண்ட, நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே" என்றும் "கறுத்தமன மொன்றும் வேண்டா கண்ணனல்லால் தெய்வமில்லை" என்றும் "கண்ணனல்லாலில்லை கண்டீர்சரண்—திண்ணமா நும் உடைமை யுண்டேல் அவனடி சேர்த்துய்மினோ" என்றும் இப்படி மத்யஸ்தமாக நின்று அருளிச் செய்வதே விச்வஸிக்க உரியதாயிருக்குமாதலால் தத்வபூதனை பகவானுடைய உக்தியான கீதையிற் காட்டிலும் தத்வ தர்சியான ஆழ்வாருடைய அருளிச் செயலே ஏற்றமுடையதாகக் குறையில்லை யென்றுணர்க.

[இதுவுமது]

191. கீதை அவதரித்ததற்கு எது காரணம்? திருவாய்மொழி அவதரித்ததற்கு எது காரணம்? என்று ஆராயுமளவில் அவதார ஹேது வைலக்ஷண்யத்தாலும் திருவாய்மொழியின் ஏற்றம் அறுதியிடப்படலாகும். கீதை அவதரித்தன் காரணம் ஸ்ப்ரஸித்தமே; ராஜ்யத்தை விரும்பிச் சரணம் புக்குநின்ற பாண்டவர்கள் ஐவரையும் வெற்றி பெறுவிக்கவேண்டி நேர்ந்தது; அதற்காகப் பாரத யுத்தம் ஸஜ்ஜம் செய்யப்பட்டது; அப்போது அர்ஜுநன் "ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண!" ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண!" என்று சொல்லி யுத்தஞ்

நாடாகத் தோற்றேமென்று ஐயைந்துமுடிப்பான் சோன்னது.

192. அங்கு நம்பிசரணேன்று தோடங்கி முடிவில் அப்ரியமென்றது; இங்கு பரமேயென்றிழிந்து போலிகவென்றுகந்தது.

செய்யமாட்டேனென்று நின்றான்; அன்னவனை "கரிஷ்யே வசநம் தவ— கரிஷ்யே வசநம் தவ." எனைப்பண்ணி யுத்தத்திலே மூட்டி ஐவரை வெல்வித்து அவர்கட்கு எதிரிகளான நூற்றுவரையும் பொடிபடுத்த வேண்டியதாக நேர்ந்தது; இதற்காகவே கீதை அவதரித்தது; இனி, திருவாய்மொழி அவதரித்தபடியோ வென்னில், "தோற்றோமட நெஞ்சமெம்பெருமான் நாரணற்கு" என்று எம்பெருமான் பக்கலிலே எல்லாரும் நெஞ்சு பறியுண்டு போம்படியாக "முடிப்பான் சொன்னவாயிரம்" என்கிறபடியே ஸ்வரூப விரோதிகளில் ஸங்கத்தை முடிப்பதற்காகவே திருவாய்மொழி அவதரித்தது. ஆக, இரண்டும் மோக்ஷ சாஸ்த்ரமேயாகிலும் அவதரிக்கிறபோது மோக்ஷார்த்தமாகவன்றிக்கே அந்யார்த்தமாக அவதரித்த ஏற்றமுண்டு திருவாய்மொழிக்கு என்றதாயிற்று.

"போர்ப்பாகு தான் செய்து அன்று ஐவரை வெல்வித்த மாயப்போர்த் தேர்ப்பாகனார்க்கு" "பாங்காக முன் ஐவரொடன்பளவிப் பதிற்றைந்திரட்டிப் படை வேந்தர்பட" என்கிற பாசுரங்களில் நோக்காக முந்தின வாக்யமும்; "ஊரும் நாடு முலகமுந்தன்னைப்போல்" "தோற்றோம்மடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு" "முடிப்பான் சொன்னவாயிரம்" என்கிற பாசுரங்களில் நோக்காகப் பிந்தின வாக்யமும் அவதரித்தன. "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய்பிரகிருதி மானாங்காரமனங்களே" என்கிற பாசுரத்தில் சொன்ன இருபத்திநான்கு தத்துவமயமான அசித்திலும், ஆத்மாவிலும் [கைவல்யத்திலும்] உண்டான பற்றுதலைப் போகுதற்காகவே திருவாய்மொழி அருளிச் செய்ததாதலால் "ஐயைந்து முடிப்பான் சொன்னது" எனப்பட்டது.

[உபக்ரமோப ஸம்ஹார ப்ரக்ரியையால் வந்த வைபவங்கூறுவது.]

192. கீதையில் உபதேசம் தொடங்குகிறபோது, "சாந்தகமேந்திய நம்பி சரணென்று தாழ்ந்த தனஞ்சயற்காகி" என்கிறபடியே தாழ்ந்து "சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம். சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்." என்ற அர்ஜுநனுடைய அநுவர்த்தனங் கண்டு ப்ரீதியோடே ஆரம்பம் செய்யப்பட்டது; முடிவிலோ வென்னில் அப்ரீதியோடே தலைக்கட்டிற்று. (உத்தர கீதையில்) "ந ஹி நூநமச்ரத்ததாநோஸி துர்மேதாச் சாஸி பாண்டவ । அபுத்த்யா யந்ந ஜாநீஷே தந்மே ஸுமஹதப்ரியம் ॥ நநுமச்ரத்ததாநோஸி துர்மேதாச் சாஸி பாண்டவ!, அபுத்த்யா யந்ந ஜாநீஷே தந்மே ஸுமஹதப்ரியம்." என்று, அர்ஜுனன் பக்கல் அவதானமில்லாமை கண்டு இங்ஙனே பேசுகையாலே

193. அதில் ஸித்ததர்மவிதி ; இதில் வித்யநுஷ்டாநங்கள்.

194. பகவன் ஞானவிதிபணிவகையென்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.

அப்ரீதியோடே தலைக்கட்டினமை அறியத்தக்கது. திருவாய்மொழியிலோ வென்னில், விமுகரைக்குறித்துப் பரமக்ருபையாலே உபதேசிக்கையாலே உபதேசத் தொடக்கத்திலே "ஏபாவம்! பரமே!" என்று ஆரம்பம் செய்யப்பட்டது. 'ஐயோ! இது என்ன கஷ்டகாலம்! இப்பாவிகளுக்கு உபதேசம் செய்ய வேண்டும்படி நமக்கு நேர்ந்ததே!' என்று ஆரம்பம் செய்கையாலே அப்ரீதியோடே உபதேசாரம்பமாயிற்று. அவ்வுபதேசங்கேட்டு உகைமாகத் திருந்துகையாலே அங்ஙனம் திருந்தினவர்களைக் கண்டு "பொலிக பொலிக பொலிக" என்று மங்களாசாஸநம் பண்ணி "உற்றேனுகந்து பணி செய்து" என்னும்படி ப்ரீதியோடே தலைக்கட்டிற்று. இத்தால், கீதைகேட்டு அர்ஜுநன் யுத்தஞ் செய்ய ஸித்தனானவத்தனை யொழிய ஸித்ததர்மபர்யந்தம் உபதேசத்தின் பலன் ஸித்திக்கப் பெறுகையாலே உபதேசம் ஸபலமானதில்லை அங்கு; அது ஸபலமானது இங்கே என்றதாயிற்று.

[அர்த்த கௌரவத்தால் வந்த வைபவஞ் சொல்லுதல்.]

193. கீதையில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ." என்று ஸித்த தர்மத்தைப் பற்றும்படியாக விதித்தவத்தனையே யுள்ளது. திருவாய்மொழியிலோ வென்னில்; "திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்மினோ" என்று விதியும் "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அநுஷ்டாநமும் ஆக இரண்டும் காணலாம். இத்தால், விதியொன்றையே பிரதிபாதிக்குமதான கீதையிற்காட்டில் விதி அனுட்டானம் என்ற இரண்டையும் பிரதிபாதிக்குமதான திருவாய்மொழிக்கே ஏற்றமுண்டென்றதாயிற்று.

[கீதைக்குமேற்றம் ஆழ்வாரங்கீகாரத்தாலே யென்றல்]

194. அந்த கீதைக்கு உத்கர்ஷமும் இவரங்கீகாரத்தாலே யென்று அறியக் கடவது. எங்ஙனே யென்னில்; "அந்தமிலாதிபம் பகவன் வணக்குடைத்தவ நெறிவழி நின்று" என்றும், "ஞானவிதி பிழையாமே" என்றும் "பண்டே பரமன் பணித்த பணிவகையே—கண்டேன் கமலமலர்ப் பாதம்" என்றுமுள்ள பாசுரங்களில் பரம வைதிகரான இவ்வாழ்வார் அந்த கீதையை ப்ரமாணமாகக் கொள்ளுகையாலேயாயிற்று அதுதனக்கும் உத்கர்ஷமுண்டாயிற்று. [புத்த முனியாயும் கபிலமுனியாயும் சொன்ன பௌத்த சாஸ்த்ரமும் ஸாங்க்ய சாஸ்த்ரமும் அவன்தான் அருளிச் செய்ததாயிருக்கச் செய்தேயும் வைதிகர்கள் அவற்றைப் பரிக்ரஹியாமையாலே அவை அப்ராமாணமாயின, 'புத்தி மோஹந

திறந்து பணிக்கலாகாதென்று விரதம் கொண்டருளினதுண்டோ? பல பாசுரங்களில் ப்ரஸக்தமாகவும் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகவும் ஸ்ரீராமாயணச்லோகங்களை யெடுத்து விபுலமாகவே வியாக்கியானித்தருளாநின்றவிவர்க்கு, இங்கு (ஆஸூரி ஸ்வாமி ஸாதிக்கிறபடி) ஸம்பந்தமுண்டாயிருக்கும் ஒரு பொருளை வெகு நேர்மையாகக் காட்டவேண்டிய கடமை யாதுகொல்? * மார்கழித் திங்கள் *என்றவிடத்தில் *சைத்ர: ஸ்ரீமாநயம்மாஸ: *என்கிற ஸ்ரீராமாயணச்லோகத்தை யெடுத்துப் பெரிதாக வியாக்கியானித்தருளுகிறார். அதைக் காட்டிலும் இந்தத்திருவிருத்தப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் ஸந்தேசத்தை யெடுத்து வியாக்கியானித்தருளவேண்டுவது மிகவும் ஆவச்யகமல்லவா? இந்த ச்லோகத்திற்கு விபரீதார்த்தம் காட்டவேணுமென்று அவர்க்குத் திருவுள்ளமிருந்ததாகில [ஸந்தேசம் ணமிதர்ஷி.] என்று தொடங்கிப் பல ஏடுகள் அருளிச்செய்ய என்ன இடையூறு புகுந்திட்டது? இந்த இடத்திலில்லையாகிலும் வேறு எந்த இடத்திலாவது வியாக்கியானித்ததுண்டோ? *யானொட்டியில் மூலத்தை உபாதாநம் பண்ணியிருந்தும் வியாக்கியானித்தருளாதே சென்றிருக்கின்றனரே. இத்தனையையும் விமர்சியாது ஆஸூரிஸ்வாமி எழுதியிருப்பவை *ஸஹோவாசம் தவ வஸ்திதம் ந ஸம்வஸ்ஸ்வஸ்தா வயவஸாஸ்தேந *என்ற நைஷத ச்லோகரத்நத்தையே நினைப்பூட்டாநின்றன. "மரணமானால் என்று இங்ஙனே வாங்ய ஸங்கிலேசமில்லாதபோது ஸமீசதவ்யஸ்த்ஜ்ஞாவநம் உவஸ்டம்" என்று இவர் எழுதியுள்ளதை இவர் தாமே மீண்டும் கடாக்ஷித்தருள்வரேல்.................(உவரி நவஸ்தவஸ்ஷ.)

5. இனி ஐந்தாவது விஷயம் :—ஸ்வாதீநர்களின் அரும்பதவுரைகளில் அபத்தங்கள் அநேக மிருப்பதால் அவ்வரும்பதவுரைகாரர்களுக்கு ரக்ஷையிட நம் பூர்வபக்ஷிகள் முயல்வது *ஸ்வாஹரவநாசித மத்தனையேயாகும். நம்முடைய தத்வப்ரதிஷ்டையில் ஏதோ சில சில விஷயங்களுக்கு மறுப்புரைத்து முடித்திடாமல் ப்ரத்யக்ஷமும் (ஒவ்வொருபாராவுக்கும்) உத்தரமுரைக்க வேணுமென நாம் பிரார்த்தித்திருந்தோம். பூர்வபக்ஷிகளும் தமது நூலின் முடிவில் ஓர்விண்ணப்பமென்று தொடங்கி "தத்வப்ரதிஷ்டையில் நியமித்தபடி இக்ரந்தத்தில் ப்ரதிஷ்டா பரிசிஷ்டங்களின் பாராக்கள் தோறுமுள்ள அஸாமஞ்ஜஸ்யங்களை எடுத்துக்காட்டி அவற்றின் துர்வாதங்கள் கிழங்கிருந்து ஸாரதபடி நன்றாய்ப் பரிஹரிக்கப்பட்டுள்ளன" என்று ஸ்ரீமத் காம்பீர்யம் பொலிய எழுதிவிட்டார்கள். இவர்களின் விப்ரலம்ப வைசத்யத்தை விவேகிகள் கண்டறிந்தேயிருப்பார்களாயினும் நாமும் சிறிது எடுத்துக்காட்டுகிறோம். சில பாராக்களின் கண்டனம் அநாவச்யகமென்று கருதித் தாமே உபேக்ஷித்துவிட்டதாக எழுதுகிறார். சில பாராக்களுக்கு நேர்கொடு நேரே உத்தரமுரைத்திட்டால் தமது பாண்டித்யப்ரகர்ஷம் நன்கு வெளியாயிடுமென்று கருதியோ வேறு என்ன காரணமோ பல பல பாராக்களை ஒன்று சேர்த்துக் கண்டிப்பதாகக் குறிப்பிடுகிறார்.

இவை இரண்டும் கிடக்க, முக்கியமான சில பாராக்களை அடியோடு தொடாது விட்டுச் சென்றிருக்கிறார். தத்வப்ரதிஷ்டையில் **125** பாராக்கள் உள்ளன. பரித்ராணத்தில் (**115, 116** வது பாராக்களின் கண்டனம்) என்றவளவோடு நின்றிருக்கிறது. இடையிலும் (**72, 73** முதலிய) பல பாராக்களை ஸ்பர்சிக்கவுமில்லை. எந்தப்பாராக்களை இவர் விட்டிருக்கிறாரோ அவை வஸ்துதஃ உபேக்ஷணீயங்களேயல்ல. "மணவாளமாமுனிகளுக்குப் பிற்பட்டவர்கள் இயற்றியுள்ள வியாக்கியானங்களும் அரும்பதவுரைகளும் பலவிடங்களில் தவறான அர்த்தங்களைத்தாங்கியிருப்பன" என்பதை நன்கு நிரூபிக்குமவை அந்தப்பாராக்கள்.—அரும்பதவுரைகாரர்க்குப் பரிந்து போராடுமிவர் அவர்களின் சொற்களில் நாம் காட்டும் அவத்யங்களையே முக்கியமாகப் பரிஹரிக்க பத்தச்ரத்தராகவேண்டும். ஈட்டு அரும்பதவுரையிலும் மற்ற மூவாயிர வியாக்கியானங்களின் அரும்பதவுரைகளிலும் குற்றம் குறைகளை நாம் காட்டியிருக்கிறோம். அங்ஙனே எத்தனை காட்ட நியமித்தாலும் எடுத்துக்காட்டப் பல விஷயங்களுண்டு. இனி நாம் எடுத்துக்காட்டப்புகும் விஷயங்கள் கிடக்க. எடுத்துங்காட்டியுள்ளவரையில் ஆக்ஷேபிஸ்வாமியின் உத்தரம்என்ன? என்பது விமர்சிக்கப்படவேணும். *என தாவியுள்கலந்த* பாசுரத்தின் ஈட்டு அரும்பதத்தில் தவறு உள்ளதாக நாம் காட்டியிருந்ததற்குப் பரிஹாரம் எழுதியுள்ளார். நாம் விபரீத க்ரஹணம் பண்ணிவிட்டதாக நிகமித்துள்ளார். அதைப்பற்றின பரிசீலனையை அடுத்தபடியாக எடுத்துக்கொள்வோம். திருவிருத்தத்தின் அரும்பதத்தை இந்த ஸ்வாமி நிதியாகக் கொண்டவராதலால் "அந்த அரும்பதம் ஸம்ப்ரதாய ஸந்நிதானத்தில் ஸம்ப்ரதாய விசேஷங்களைக் கேட்டுணர்ந்தவரால் எழுதப்பட்டதன்று" என்பதை நிரூபிப்பதில் நமக்கு ஸங்கோசமுண்டாயது. தத்ஸம்வாதகமாகச் சிலவற்றை எடுத்துக்காட்டினோம். நம் அபிமதத்திற்கு ஸாதகமாகவே இவர் விடையளித்துள்ளார். (பக்கம் **180**ல் திருவாய்மொழியின் ஈடுபோல மற்ற இயற்பாவியாக்கியானம் முதலியவை நியமேந ஆசார்ய ஸந்நிதியில் கேட்டு க்ரஹிக்கப்படுவன வென்று சொல்லமுடியாது" என்றெழுதியுள்ளார். இதனால் மூவாயிர அரும்பதங்களும் ஸ்வகபோலகல்பித ஸம்ப்ரதாயவிசேஷங்களாயிருக்கலாம் என்கிற இசைவு காட்டப்பட்டு, தாம் பெரு ஸாதகமாகக்கொண்ட திருவிருத்த அரும்பதத்தின் கதியும் அதுவேயென்று தம்மாலேயே ஸ்தாபிதமாயிற்று. அரும்பதக்காரர்களுக்குக் குறைகூறும் விஷயத்தில் இவரும் தீக்ஷைகொண்டவரேயென்பது நன்குவிளங்கிற்று. திருவிருத்தத்தின் அரும்பதத்தையே பெரிய அவலம்பமாகக் கொண்டு இவர் ஆரவாரித்ததும் வ்யர்த்தமேயாயிற்றென்று தேறிற்று. (பக்கம் **180**ல்) "இப்போது ஈட்டின் அரும்பதவுரையில் விவாதமே யொழிய இயற்பா அரும்பதவுரையில் விவாதமேயில்லையாதலால் தத்தத்தோஷங்களை யெடுத்துக் காட்டுவது தகாது" என்றெழுதுமிவர் திருவிருத்தவுரையில் நேர்ந்துள்ள மஹத்தான விவாதத்தை மறந்தே போயினர். அவ்விடத்து அரும்பதவுரையினால் வந்த அனர்த்தந்தானே அதிகம்.

ன அவர் ப்ரக்ருத விவாதச்லோகத்திற்கு விபரீதப்பொருளைத்திருவுள்ளம் பற்றியிருந்தாராகில் அதை விசிஷ்ய எடுத்துக்காட்டி வியாக்கியானம் செய்தருளாமற் போவரா? *யானேட்டி யென்னுள் பாசுரத்தின் அவருடைய வியாக்கியானத்தில் [இருபத்தினாலாயிரப்படியில்] *ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே* என்று சுலோகம்மாத்திரம் உதாஹரிக்கப்பட்டுளதேயன்றி அதற்கு அர்த்தமாக ஒரு அக்ஷரமும் அருளிச் செய்யப்பட்டிலது. இதில் அக்ரமான்வயம் செய்ய வேணுமென்று அவர்க்குத் திருவுள்ளமாகில், அப்படியே எம்பெருமானார் பட்டர் நஞ்சீயர் முதலான ஆசாரியர்களும் நிர்வஹித்துவந்திருப்பர்களாகில் அதை பெரியவாச்சான் பிள்ளை ஸங்க்ஷேபமாகவாகிலும் அருளிச்செய்யாது விடுவரோ? அர்த்தமருளிச்செய்யாவிடினும் மூலத்தை உதாஹரிக்கும்போதே அப்பொருளுக்கு ஸ்வாரஸ்யமான அந்வயக்ரமத்தைக்காட்டும் முகமாகவாவது உதாஹரித்திருக்கலாமே. அதுவுமில்லையே. அத்யமே மரணம்வா என்கிற ஆநுபூர்வியாகத் தானே அருளிச்செய்துளர். ப்ரமாணச்லோகம் உள்ள ஸந்நிவேசத்திலே ஒரு அர்த்தம் தோற்றுவதாயிருந்து, அது அஸ்வரஸமாகவோ விருத்தமாகவோ தோன்றினால் அவ்விடங்களில் நம் ஆசாரியர்கள் அது பொருளன்று என்று கண்டவணமிறுத்து ஸ்வாபிப்ராயத்தை அழகிதாக அருளிச்செய்திருக்கும் முறைமையை பஹுஸ்தலங்களிலும் கண்டிருக்கிறோம். இங்கு அங்ஙனன்றிக்கேயிருக்க பத்தச்ரத்தமான பங்க்தியையும் அந்யபரமான பங்க்தியையும் அவலம்பித்துக்கொண்டு மனம்போன போக்கில் பேசியுமெழுதியும் போருகிறவர்களுக்கு உத்தரமுரைக்கவேண்டும்படியான தைவதுர்விபாகமும் அந்தோ! நமக்கு நன்றாயிற்று!.

"மரணமானால் இரங்குமதிறே" என்கிற ஸ்ரீஸூக்தியில் நம் ஆக்ஷேபி ஸ்வாமி போலவே மற்றுஞ் சில மஹான்களும் மயங்கியிருப்பதாக அறிகின்றோம். ஆதலால் இங்கு இதைப்பற்றி இன்னமும் சிறிது விரித்துரைக்க விரும்புகிறோம். பிறருடைய மதத்தை அவலம்பித்தே பேசுகிறோம். "தனக்கு சரணமென்றால் இரங்குமதன்றே" என்கிற ஸ்ரீஸூக்திக்கு—கடல்தன்னைக்குறித்து ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி என்று சொல்லிப் பெருமாள் படுகாடுகிடந்த விடத்திலும் இக்கடல் இரங்கிற்றில்லையிறே என்பது பொருள் என்றே வைத்துக்கொள்வோம். அதற்கடுத்தபடியாயுள்ளதான "மரணமானால் இரங்குமதிறே" என்கிற ஸ்ரீஸூக்தியும் அந்த ஸ்ரீராமாயணப்ரகரணத்திற்குச் சேரவே நிர்வஹிக்கப்படவேண்டுமானால் அப்படியே நிர்வஹிப்பது. உண்மையில் "ஆவயோர் ஜய ஸம்வாதோ—ஸந்தஸ்ய புருஷோத்தம" என்ற வீஷணவாக்யஜாலங்கள் பெருமானுடைய திருவாக்கில் வெளிவந்த பிறகே கடலரசன் முகங்காட்டியிருக்கிறானென்பதும், அத்யமேச்லோகாநுஸந்தானத்திற்கு அடுத்தபடியாக அவன் முகங்காட்டிற்றிலன் என்பதும் அபலபிக்கமுடியாதவையாதலால், மரணமானால் என்கிற ப்ரக்ருத ஸ்ரீஸூக்திக்கு 'தனக்கு அனர்த்தம் விளைவதானபடி கண்டால்' என்று பொருள்கொள்ள ப்ராப்தமாகுமேயல்லது வேறு என்னபொருள் சொல்லமுடியும்? தனக்கு அனர்த்தம்

விளைவதானபடி கண்டது எப்போது? என்று பார்த்தால் *ஆவஶாநயவுக்குப் பிறகேயல்லது அதற்கு முன்பு இல்லை. அத்யமே மரணமென்றபோதே கடலரசன் இரங்கிவிட்டான் என்று சொல்லுவதாயிருந்தால் பூர்வபக்ஷி ப்ரப்ருதிகளுக்கு இந்த ஸ்ரீஸூக்தி பயனளிக்கும். ஸ்ரீராமாயண கதாஸந்தர்ப்பமோ அப்படியில்லை. ஆகவே தங்களுடைய வாதத்திற்கு இந்த ஸ்ரீஸூக்தியை உபஷ்டம்பகமாகக் காட்டுவது மிகவும் அபஹாஸ்யமேயாகும். மரணபதம் காண்கிறவளவையே கொண்டு ஆரவாரிப்பதானால் "யந்நமஸ்யம் தத்வஹரயஃ" என்கிற உபநிஷத்தையும் "மரணமானால் வைகுந்தம்" என்கிற அருளிச் செயலையும், மற்றும் ஸமணவத். யேதி தவாகஜமாபிநள் பலவற்றையும் இவர்கள் தமக்கு உபஷ்டம்பகமாக அவசியம் காட்டலாம். அவற்றோடு இத்தோடு ஒரு வாசியில்லை காணும்.

இவ்விஷயத்தில் நம் ஆஸூரிஸ்வாமி (பக்கம் 9 ல் அஃதாவது என்று தொடங்கி) அருளிச்செய்திருக்கும் திவ்யஸூக்திகளின் ஸாமஞ்ஜஸ்யம் அளவிடமுடியாதது. மரணமானால் என்ற விடத்துள்ள மரணசப்தம் ஒன்றை ப்ரத்யபிஜ்ஞாவம் பண்ணுவதாகவும், ஒன்றைக்காட்டிக் கொடுப்பதாகவும், ஒன்றை ஸூசிப்பிக்கின்றதாகவும் வெகு நுட்பமாகக் கண்டறிந்து அற்புதமாக எழுதியுள்ளார். இதைக்கண்ட ஒரு ஸாவதர் பேசின பேச்சு ஸ்மரணமாயிருந்தது; அதாவது— "ஆஸூரிஸ்வாமி இங்ஙனே பரித்ராண ப்ரபந்தம் செய்தருளப்போகிறாரென்பதையும், அதுதான் ஸாரவாணத்திற்கிலக்கான ராவணகளேபரம் பட்டபாடு படப்போகிறதென்பதையும் இந்த மரணபதம் ஸூசிப்பிக்கின்றது — என்கிற விதனையும் சேர்த்து எழுதாதுவிட்டதென்னே? உண்மையில் இவ்விஷயங்களையும் அந்த மரணபதம் நன்கு ஸ்மரிப்பிக்கின்றதென்பதில் விப்ரதிபத்தியில்லையிறே" என்பதாம். இவ்வளவு ஸத்தூக்திகள் அவதரிக்க அவகாசமளித்துக் கொண்டாரே! என்று நாமும் வருந்துகிறோம்.

ஆஸூரி ஸ்வாமி (பக்கம் 10ல் முதல் பாராவில்) எழுதுகிறார்—பெரியவாச்சான் பிள்ளை ஸூஷிவக்ஷி தாயவுங்களை அழகாகக் காட்டி ஸ்ரீஸூக்திகளை அமைக்க வல்லவராயிருந்தும் இங்ஙனே நாம் வெகு ச்ரமப்பட்டு நிர்வஹிக்கவேண்டும்படியான ரீதியில் மரணமானாலித்யாதி ஸூக்தியை ஏன் அமைத்தருளினாரென்றால், அத்யமே மரணமென்னும் ச்லோகத்தில் *மே மரணமென்று அந்வயிக்கவே கூடாது, *ஸாகரஸ்ய மரணமென்றே அந்வயிக்கவேண்டும்—என்று காட்டுதற்காகவேயாம்; இதை வேறு விதமான வாக்ய ஸந்நிவேசத்தினால் காட்டமுடியாதன்றோ—என்கிறார். இதைக்கண்டு *கிம் ஹஸெஃ விஷவெஉ கிஞாஹொ * என்று தடுமாறுகின்றோம். கேண்மின்;—

ஆரியர்காள்! பெரியவாச்சான் பிள்ளை ஸ்வாக்ஷரமாக ஸூத்ரமாய் அமைக்கவேணுமென்று ஏதேனும் ஸங்கல்பித்தருளினதுண்டோ? *ஸயஃஶாஸ்த்ராயாவ வைந வாவெத்ராதவம்ஃநஹெ வெயாகரணாஃ - என்ற கணக்கிலே ஏதேனும் நிர்ப்பந்தம் கொண்டருளினதுண்டோ? ஸதூெயெஉபாகாயஃத்தை நாம் வாய்

*என்னீர்மை கண்டிரங்கி யீட்டில் ஒரு தமிழனுக்கும் ஸட்டர்க்கும் நடந்த ஸம்வாதத்தைக் கூறுமிடத்து ஸட்டர் எடுத்துரைத்ததாக அங்குக் காட்டப்பட்டிருக்கின்ற செய்யுளை அரும்பதவுரைகாரர் விவரிக்குமிடத்துச் செய்யுளின் பாடத்தையே தவறுகக் காட்டிப் பொருளையும் அஸாதுவாக எழுதி ஸூக்ஷ்மத்தையும் ஸந்தேயவாக்கியுள்ளார்கள் என்று நாம் எதற்காகக் காட்டினோமென்றால் "அரும்பதவுரைகாரர்கள் பலவிடங்களில் தம் மனம்போனபடியெல்லாம் எழுதுகிறவர்களே யாதலால் அவர்களின் உக்திகளையேகொண்டு போராடவேண்டா" என்பதற்காகவே. மேற்கூறிய தவறுகளை ஆஸூரி ஸ்வாமி சிறிதும் மறுக்க மாட்டாமல் அங்ஙனமே இசைந்துகொடு நின்று "இந்த ஸூசோதநங்கள் ப்ரதிதந்த்ரவிஷயங்களல்லவாதலால் ப்ரதிதந்த்ரவிஷயகஸூக்ஷ்ம தவிவாதத்தில் அவற்றை யெடுத்துக்காட்டுவது அஸமஞ்ஜஸம்" என்கிறார். இந்த அஸமஞ்ஜஸதமங்களான உக்தி ராசிகளில் "ப்ரதிதந்த்ரம் — ப்ரதிதந்த்ரம்" என்று இவர் பலகாலும் எழுதுகின்றார். அந்தோ! ப்ரதிதந்த்ரம் (ப்ரதிதந்த்ரம்) என்னுஞ் சொல்லுக்கு இன்னது பொருளென்றே அறியகில்லாத விவர் அச்சொல்லை மீண்டு மீண்டும் பிரயோகிப்பது ஏனோ? ப்ரதிநியதம் தந்த்ரமென்கிற வ்யுத்பத்தியினால் — ஸந்யமிதூஷிஸிநஹூவமதமாய் தத்தூதாஸாயாரணமான அர்த்தமே ப்ரதிதந்த்ரார்த்தமென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் நிரூபிக்கிறார்கள். ந்யாயஸாரத்தில் * ஸ்வதந்த்ரஸித்தஃ ப்ரதிதந்த்ரஸியத* என்றுள்ளது. அத்யமேச்லோகார்த்தத்தை ப்ரதிதந்த்ரார்த்தமென்று பண்டிதர் சொல்லகில்லார் * அத்யமே ச்லோகத்தின் பொருளுக்கும் நம் ஸித்தாந்தத்திற்கும் என்ன ஸம்பந்தம்? உள்ளதான ஶப்த ஸந்நிவேசம் ஒருகாலும் * ஸாகரஸ்ய மரணத்தை உணர்த்தமாட்டாது என்று நமது வாதமேயல்லது * ஸாமாநிக்ரஹ ஸங்கல்பத்தையே வசிக்கவல்ல ச்லோகாநுபூர்வியிருந்திருக்குமாகில் இங்கு வாய்திறப்பாரார்? நமது ப்ரத்யவஸ்தாநத்தின் பரிசு இன்னதென்றே உணராதவிவர் அந்தோ! பெருஞ்சுமை நூல் வரைந்தது பேரின்பமே.

6. இனி ஆறுவது விஷயம். *ராஜோவிநஶாஸிஹாஷதெ - என்றதன் தாத்பர்யத்தை இவர் உள்ளபடி க்ரஹியாமலே மேமரணம் என்கிற யோஜனை அத்தோடு விரோதிக்கின்றதாக ப்ரமப்ரத்யவஸ்தாநம் பண்ணுகின்றார். இராமபிரானுடைய திருவாக்கில் நின்று எந்த எந்த வார்த்தை வெளிவருகின்றதோ அதுவெல்லாம் அப்படியப்படியே நிறைவேறியே தீருமென்பதுதான் ஸ்ரீராமனுடைய ஸத்யஸம்யகமென்று கொள்வது பிசகு. சீற்றமோ வருத்தமோ மீதூர்ந்து செல்லுங்காலங்களில் இராமபிரானது திருவாக்கில் வெளிவருகின்ற பலபல சொற்கள் உடனே மாறிவிடுகின்றன. அன்பர்களின் அபேக்ஷிதத்தை நிறைவேற்றுவதாகச் சொல்லுகிறவார்த்தை ஒருகாலும் பழுதுபடுவதல்லாமை

யாலே தாத்பர்யவைஷம்யமுள்ளதாக ஸூக்ஷ்மமான விஷயம் பெருமாளுக்குள்ளது. * பராஜோயி நீசரலிஸ்தேக * என்பதன் கருத்தும் அதுவேயாம். ஆகவே ஸ்ருதத்தில் அதுகொண்டு தோஷமொன்றுமில்லை என்று தெளிவது.

7. இனி ஏழாவது விஷயம். பூர்வாசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களில் பலபல வகையான பிறழ்வுகள் நேர்ந்திருக்கின்றனவென்பது மறுக்க முடியாதது. ஆனால், சில பிறழ்வுகள் நேர்ந்திருப்பது உண்மைதானென்றும், அத்தகைய அச்சுப்பிழைகளையெல்லாம் வித்வான்கள் கண்டறிந்தும் கேட்டறிந்தும் திருத்திவைத்துக்கொண்டேயிருக்கின்றார்கள் என்றும் ஆசார்யஸ்வாமி யெழுதுகிறார். சிலர் சிலவற்றைத் திருத்தி வைத்துக்கொண்டிருக்கலாம். இன்னமும் திருத்த முடியாத எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் வாக்கியப்பிழைகளும் எண்ணிறந்தவையுள்ளவென்று உதாஹரணமாக காட்டுகிறேன். இத்தகைய பிறழ்வுகளை ஒவ்வொன்றாக நெடுநாளாகவே அடியேன் எடுத்தெழுதி வைணவர்கள் முதலிய மாஸிக பத்திரிகைகளிலும் ஸ்ரீகாரிய ஸஞ்சிகைகளிலும் வெளியிடுவித்து வருகின்றேன். இங்ஙனே பல்லாண்டு பல்லாண்டாகச் செல்லும்.

ஸமீபகாலத்தில், பண்டிதமணியான ஒரு நண்பர் அடியேனை ஒரு கேள்வி கேட்டிருக்கின்றார். அதனை இங்கு வெளியிடுகின்றேன். —ஸ்ரீராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் (51—58) * நவிஜ்ஞாதாஸ்ய மேதஸ்ய பூர்வோக்தம் ததஹம் வச: । ஹந்தவ்யோ ராவணோ யுத்தே ஸாநுபந்தோ ஹி ஸர்வதா ॥ * என்கிறச்லோகமுள்ளது ப்ரஸித்தமே. இது இராவணனை நோக்கித் திருவடி கூறுவது. திருவாய்மொழியில் (7-1-9) * குலமுதலடுந்தீவினை * என்றவிடத்து வியாக்யானத்தில் [இருபத்தினாலாயிரப்படியிலும் ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும்] இந்தச் லோகத்தைப் பூர்ணமாகவெடுத்து " என்றானிறே மால்யவான் ராவணனுக்கு " என்று அருளிச்செய்யப்பட்டிருக்கக் காண்கிறது. இது எப்படி பொருந்தும்? என்று கேட்டிருக்கிறார்.

இந்தச்லோகம் மால்யவானுடைய வார்த்தையாக வால்மீகி ராமாயணத்தில் கண்டதில்லை. ஈட்டு அரும்பதவுரைகாரரும் " ஹந்தவ்யோ ராவணோ யுத்தே ஸாநுபந்தோ ஹி ஸர்வதா " என்று எழுதியுள்ளார்.- ப்ரமாணத்திரட்டில் " யுத்தகாண்டே " என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டுமுள்ளது. அத்யாயஸங்க்யையையும் ச்லோகஸங்க்யையையும் நியமேந காட்டிவரும் ப்ரமாணத்திரட்டில் இங்கு அவை காட்டப்படவில்லையென்பது கவனிக்கத்தக்கது. இங்கு ஏதோ பிழையிருந்து தீரவேண்டும். ஸ்ரீராமாயணமும் பிழைபட்டதென்னலாமா? ஈடுமுதலியன பிழைபட்டன வென்னலாமா? என்று பெரியோர்களைக்கேட்டால், "மால்யவானுடைய வார்த்தைகளிலும் இந்தச்லோகம் வந்திருக்கக்கூடும்" என்கிறார்கள் சிலர். " ஹநுமான் என்றிருந்தது மால்யவான் என்று பிறழ்ந்திருக்கக்கூடும் " என்கிறார்கள் சிலர். மால்யவானென்பது

ஈட்டில்மாத்திரமிருந்தால் லேககப்ரமாதவதிதமென்னலாம். மற்றொரு வியாக்யானத்திலும் அரும்பதவுரையிலும் இருக்கிறதே யென்கிறார்கள் சிலர். ஆஸூரி ஸ்வாமி என்ன ஸாதிப்பாரோ? பெரியோர் நன்கு விமர்சித்து நிர்ணயித்தருள வேணும்.

இப்படியாக எடுத்துக்காட்டக்கூடிய பிறழ்வுகள் பலபலவுண்டு. இத்தகைய பிறழ்வுகளை அரும்பதவுரைகாரர்கள் பர்யாலோசியாமலே தம் நெஞ்சில் தோற்றினதே எழுதிவைத்துப்போகின்றனர்.

8. இனி எட்டாவது விஷயம். (விகல்பகோடிகளைப்பற்றின விசாரம்.) இந்த அத்யமே ச்லோகத்தில் விகல்பம் விவக்ஷிதம். அந்யோந்ய வ்யாவர்த்தங்களான இரண்டு ஸம்பவங்களில் ஒன்று அவசியம் நேர்ந்தே தீரும் என்பது பெருமாளுக்கு விவக்ஷிதம். " சாலயந்து ஸ்வசக்த்யைவ அபிவா தீர்த்தவ்ருத்தய: । ஸ்ரியோவா ஸவதனோ யஸ்ய விபரீதேத வர்தயவா ॥ " " ஸராவணஸராமம்வா " இத்யாதி ஸ்தலங்களிற்போல் இரண்டில் ஒன்றுதான் நேரும். எல்லா ஜனங்களுடையவும் தலைமேலிருக்கவேண்டும்; அல்லது வனத்திற்பூப்போல் வாடியழியவேண்டும். ஒன்று நேர்ந்தால் மற்றொன்று நேரமுடியாது. ஜனங்கள் தலைமேலிருந்தால் வனத்தில் அழியாது. வனத்திலேயே அழியுமானால் அவர்கள் முடிமேல் ஏறாது. இரண்டில் ஒன்றுதான் ஸம்பவிக்கும்; மூன்றாவது இல்லை இரண்டும் சேர்ந்து ஸம்பவிப்பதுமில்லை. இது விகல்பத்தின் ஸ்வரூபம். விகல்பாலங்காரத்துக்கு லக்ஷணங்கூறிய ஆலங்காரிகர்களும் " விரோதே துல்யபலயோர் விகல்பாலங்க்ருதிர் மதா " என்றார்கள். இரண்டும் சேர்ந்து ஸம்பவிக்க முடியாத பரஸ்பரவிருத்தமான இரண்டு விஷயங்களைச் சொல்லுவது விகல்பாலங்காரமென்று வியாக்கியானிக்கப்பட்டது. * ஸத்யப்ரமாணம் ஆவாமுவா நமயந்து சிராம்ஸிவா * தலையை வணக்கினால் வில்லை வளைக்க முடியாது. வில்லை வளைத்தால் தலைவணக்கமில்லை. * வததூவிரதம் வாபி நரதூஷிஅ கஸ்யாபி ந: । அத்ய காலம் கூதாந்தோவா துஃவஸ்யாந்தம் கரிஷ்யதி ॥ * என் துயரைத் தொலைக்கவல்லவர் என் பர்த்தா, அல்லது யமன் என்கிறாளொருதலைவி. பர்த்தா வந்து சேர்ந்தால் மரணமில்லை. பர்த்தா வராவிடில் மரணமே. மரணமானால் நாயகஸமாகமமில்லையென்று விகல்பஸ்வாரஸ்யம் சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோல் இங்கும் " " கடலை நான் கடப்பது, - இல்லையேல் முடிவது." ஒன்று நேர்ந்தால் மற்றொன்றில்லை என்கிற அர்த்தம் மிக்க பொருத்தமாகவுள்ளது. விபரீதார்வயத்திலோவென்றால் விகல்பவைவரியே தொலைந்துபோகிறது. " நான் கடலை வற்றடித்துக் கொல்வேன், அல்லது நான் அதைக்கடப்பேன் " என்று சொல்லுகையில், வற்றடித்தல் கடப்பதற்கு விரோதமன்றிக்கே யிருப்பதோடு ப்ரத்யுத அதற்கு ஸாதகமாயிருப்பதால் இரண்டும் சேர்ந்தே ஸம்பவிக்குமவையாகவுள்ளன. ஆகலால் ச்லோகத்திலுள்ள இரண்டு வாகாரங்களும் நிஷ்

பலமாகின்றன. இல்லாத பதங்களை அத்யாஹரித்துக்கொண்டு ஸ்வாரஸ்யகல் பநமும் [illegible]. அத்யாஹாரத்துக்கு ஆவச்யகதையுமில்லை. ஆகையால் விபரீதாந்வயத்தில் கிடைக்கும் அர்த்தம் ஒரு விவேகியின் ஹ்ருதயத்திலும் நிற்கவில்லாதது.

ஆக இவ்வளவாலும் [illegible] ஆஸூரிஸ்வாமியின் வாதம் பலபடிகளாலும் பயனற்றதென்பது பரக்க நிரூபிக்கப்பட்டதாயிற்று. இன்னமும் வக்தவ்யமான விஷயங்களையெல்லாம் விளங்கவுரைத்து *[illegible]* என்கிற க்ரந்தத்தை ஸம்ஸ்க்ருத பாஷையில் இயற்றி தேவநாகராக்ஷரத்தில் அச்சியற்றி வருகின்றோமாதலால் இந்தத் தமிழ்நூலை இவ்வளவிலே உபஸம்ஹரிக்க நினைக்கின்றோம். [illegible] அந்த க்ரந்தத்தையும், அதனை [illegible] பல வித்வான்கள் எழுதி வெளியிட்டிருக்கும் [illegible]களையும் கடாக்ஷித்தருளி பக்ஷபாதமற ப்ரார்த்தித்து நிற்கின்றோம். இந்த க்ரந்தத்தில் இடையிடையே சில விஷயங்களைப் பற்றி "மேலே விரியவுரைப்போ" மென்று கூறியுள்ளோம். அவற்றின் விரிவும் அந்த [illegible]யில் காண்க.

[illegible] பல பல விஷயங்களில் ஆஸூரிஸ்வாமி [illegible] நீயமான [illegible] ஸ்வயம் [illegible]தராய் அந்த [illegible]த்தை அடியேன்மீது ஆரோபித்து எழுதியுள்ளார். அவற்றால் வாசகர்களுங்கூட [illegible] ராக விரகில்லையாகையால் அவற்றிற்கு ப்ரத்யுத்தரம்காட்ட அவசியமில்லையாயினும் விஷய [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

தத்வப்ரதிஷ்டா விஜயத்வஜம்

முற்றிற்று.

காமகோடி பிரஸ், காஞ்சிபுரம்.

15992